Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா: 8.00
# வலம்புரி
Valampurii
பக்கங்கள்:பன்னிரண்டு
சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 03 செவ்வாய்க்கிழமை (19.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 212

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அல்லது பிரிந்து செல்ல அங்கீகாரம்

# சர்வதேசப் பிரகடனம் வெளியிட பொது அமைப்புக்கள் தீர்மானம்

### அடுத்தமாதம் யாழில் மக்கள் எழுச்சிப்போர்

(அலுவலக நிருபர்கள்)

**ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும். அல்லது அவர்கள் பிரிந்து செல்வதற்கு சர்வதேச சமூகம் அங்கீகாரம் வழங்க வேண்டும்.**

**இதனை வலியுறுத்தும் சர்வதேசப் பிரகடனம் ஒன்றை வெளியிட தமிழர் தாயகப் பொது அமைப்புகளின் ஒன்றியம் முடிபு செய்துள்ளது.**

**இம் முடிபு நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற பொது அமைப்புக்களின் ஒன்றியக் கூட்டத்தில் எடுக்கப் பட்டது. இதனை சர்வதேசத்திற்கு உணர்த்தும் வகையில் மாபெரும் மக்கள் எழுச்சிப்போராட்டம் அடுத்த மாதம் முற்பகுதியில் இடம்பெறவுள்ளது.**

இன்றைய சமாதான சூழலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில். இதன் அடிப்படைப் பின்னணியை சர்வதேச சமூகத்துக்கு சுட்டிக்காட்டவும், பொதுக் கட்டமைப்புத் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் செயற் தேசப்பிரகடனம் ஒன்றை வெளியிட முடிபு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சொலமன் சிறில் தலைமையில் நேற்றைய கூட்டம் இடம் பெற்றுள்ளது.

சர்வதேச சமூகத்திற்கு உண்

## படைப் புலனாய்வுப் பிரிவினர் வெளியில் செல்வதற்கு தடை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள படைப்புலனாய்வுப் பிரிவினரை வெளியில் எங்கும் நடமாடாமல் அவர்களது முகாம்களிலேயே தங்கியிருக்குமாறு உயர் மட்ட உத்தரவு வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் முக்கிய புலனாய்வு முகவர் நிறுவனமான, புலனாய்வுப் பணியகத்தினருக்கும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கும் இத்தகைய உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளது. படைப்புலனாய்வுப் பிரிவினரை இலக்குவைத்து கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடைசியாக கல்முனையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் இலங்கை புலனாய்வுப் பணியகத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் ராஜ்டீன் (வயது 35) என்பவர் கொல்லப்பட்டதுடன் கான்ஸ்டபிளான கபில காயங்களுக்குள்ளானார்.

இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தமக்குத் தக (12ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருந்து புலிகள் விலகுவதாக அறிவிக்கவில்லை

### கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹொக்லண்ட்

(கொழும்பு)

போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருந்து தாம் விலகுவதாக விடுதலைப்புலிகள் அறிவிக்கவில்லை. இந்த வதந்தியில் உண்மையில்லை.

அவர் மேலும் கூறுகையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் இயக்க அங்கத்தவர்கள் தரைவழியாக பயணம் செய்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்த் வழிமுறைகளை புலிகள் துள்ளனர்.

புலிகள் கடந்த 1 ஆம் திகதி முன்வைத்த யோசனையையே புலிகள் மீண்டும் வலியுறுத்துகின்றனர். புலிகளின் இந்த பதிலை சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த

கு புட்டுக்காட்டவும், பொதுக் கூட்டமைப்புத் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் செயற்பாடுகளிற்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை சூழலை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தவும்,

மக்கள் எழுச்சி மூலம் சர்வ அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சொலமன் சிறில் தலைமையில் நேற்றைய கூட்டம் இடம் பெற்றுள்ளது.

சர்வதேச சமூகத்திற்கு உண்மையைப் புலப்படுத்தும் வகையில் முதல் கட்டமாக யாழ்ப்பாணத்தில் அடுத்தமாத முற்பகுதியில் (12ஆம் பக்கம் பார்க்க)

போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருந்து தாம் விலகுவதாக விடுதலைப்புலிகள் அறிவிக்கவில்லை. இந்த வதந்தியில் உண்மையில்லை.

இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் இயக்க அங்கத்தவர்கள் தரைவழியாக பயணம் செய்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்த வழிமுறைகளை புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இது தொடர்பாக புலிகளின் இணக்கம் இன்மையை புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்

புலிகள் கடந்த 1 ஆம் திகதி முன்வைத்த யோசனையையே புலிகள் மீண்டும் வலியுறுத்துகின்றனர். புலிகளின் இந்த பதிலை சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவை சந்தித்து தெரிவித்தேன்.

தரை வழிப்பயணம் குறித்து புலி (12ஆம் பக்கம் பார்க்க)

# போரை உடன் ஆரம்பிக்க உத்தரவிடுங்கள்
# வடமராட்சி கிழக்கு மக்கள் பிரபாவுக்கு மகஜர்

(வடமராட்சி கிழக்கு)

மீண்டும் போரை ஆரம்பிக்குமாறு கோரி வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களால் பிரமாண்டமான பேரணி ஒன்று நேற்று நடாத்தப்பட்டது.

நேற்றுக்காலை 10.30மணிக்கு ஆரம்பமான இப்பேரணியில் வடமராட்சி கிழக்கு, மாமுனை, செம்பியன் பற்று, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, வேம்படி, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, சாண்டிக்குளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

மருதங்கேணி சந்தியில் ஆரம்பமான இப்பேரணி வடமராட்சி கிழக்கு பொதுவிளையாட்டு மைதானத்தில் முடிவுற்றது.

போர் எழுச்சிக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வின் இறுதியில் தமிழீழதேசியத்தலைவருக்கான மகஜரை போர்எழுச்சிக் குழுவின் தலைவர் வே.சின்ராஸ் யாழ்.மாவட்ட கடற்புலிகளின் தளபதி கலாத்தனிடம் கையளித்தார்.

அம் மகஜரில் சமாதான சூழல் ஏற்பட்டு மூன்றரை வருடங்கள் ஆகின்றன. எனினும் அதன் பலாபலன்கள் எமது மக்களைச் சென்றடையவில்லை. இனிமேலும் பொறுமை காக்க முடியாது.

சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதில் இனியும் காலம்தாழ்த்த முடியாது. சமாதான சூழலில் பெறவேண்டிய எவையும் எமது மக்களுக்கு கிடைக்கவில்லை.

போருமற்ற, சமாதானமுமற்ற நிச்சயமற்ற ஒரு சூழலில் வாழ்வதிலும் பார்க்க போர்மூலமாக எமது உரிமைகளை போராடிப்பெறுவதே மேலானது.தற்போதுள்ள சமாதான சூழல் நீடிப்பதால் எமக்கு எதுவித பலனும் கிடைக்காது.

அதேநேரம் உரிமையைப் பெறும் காலமும் நீண்டுகொண்டே செல்லும் என்பது தெளிவு. பேச்சுக்கள் மூலம் எமது மக்களுக்கான உரிமைகள் கிடைக்கப்போவதில்லை. எனவே சுதந்திரப் போராட்டதை காலம் தாழ்த்தாது முன்னெடுப்பதற்கு கட்டளையிட வேண்டும் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-43.35)



# இருதரப்பினராலும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதில் வெளிநாட்டுத் தலைவர்கள் மிக ஆர்வமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் பேணப்படவேண்டும் என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு நோர்வே செயற்பட்டு வருகிறது.

இருதரப்பினருக்கும் இடையே சுமுக நிலையை ஏற்படுத்துவதற்காக நோர்வே பிரதி அமைச்சர் விடார் ஹெல்கிசன், விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோர் விரைவில் இலங்கை வரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சுமுக நிலையை ஏற்படுத்துமுகமாக ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசியும் விரைவில் இலங்கை வரவுள்ளார்.

இது இவ்வாறிருக்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா சென்றுள்ளார். வாசிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை சந்தித்து ரணில் பேசவுள்ளார்.

இச் சந்திப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொடவும் கலந்துகொள்வார்.

இச் சந்திப்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனும் கலந்துகொள்வார் எனத் தெரிய வருகிறது.

இச் சந்திப்பையடுத்து அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் உட்பட அந்நாட்டின் பல முக்கிய பிரமுகர்களையும் ரணில் சந்தித்துப் பேசவுள்ளார்.

அத்துடன், ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களையும் ரணில் சந்தித்து உரையாடுவார்.

இச் சந்திப்புகளின் போது இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம், பொதுக்கட்டமைப்பு, ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியன தொடர்பாகவும் ரணில் விளக்கமளிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச ஜனநாயக சங்கத்தின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே ரணில் அமெரிக்கா சென்றுள்ளார்.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் பிரதான அரசியற் கட்சிகள் அங்கம் வகிக்கும் சர்வதேச ஜனநாயக சங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (க-4)

## கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கு
# வீடமைக்கும் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கஷ்டப் பிரதேசங்களில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்கும் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

வடமத்திய மாகாணத்துக்கான வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் 50 ஆசிரியர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன என்றும் இதற்கு மேலதிகமாக வடக்கு - கிழக்கு, ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களிலும் வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-2)

# தலைவர் கைதாகும் செய்தியால் கட்சிக்குள் பெரும் கொந்தளிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவை விரைவில் கைது செய்ய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்திருப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

போலி கடவுச்சீட்டு பயன்படுத்தியமை, தங்கம் கொள்ளையடித்தல், கொலை குற்றச்சாட்டுகளின் கீழ் ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க கைதுசெய்யப்படவுள்ளார்.

இக் கைது நடவடிக்கை அடுத்த சில நாட்களுக்குள் நடைபெறக் கூடும் என்றும் ஜே.வி.பிக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அந்தச் செய்தி கூறுகிறது.

இதனால், ஜே.வி.பியினுள் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சோமவன்ச அமரசிங்கவைக் கைது செய்வதற்குத் தேவையான தகவல்கள் அனைத்தும் அது பற்றிய விசாரணைகளை மேற்கொண்டு வரும் குழுவிற்குக் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் இணக்கம் கிடைத்த பின்னரே குறித்த விசாரணைகளை நடத்திவரும் குழு சோமவன்ச அமரசிங்கவை உடனடியாகக் கைதுசெய்யும் என்றும் கொழும்பு ஊடகம் தெரிவிக்கிறது. (க-4)

## குழு மோதலில் ஒருவர் பலி

மினுவாங்கொடப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொரு நபர் காயமடைந்துள்ளார்.

குறிப்பிட்ட பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலவி வந்த முறுகல் நிலையே இந்தச் சம்பவத்துக்குக் காரணமென பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக குறிப்பிட்ட பகுதிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ- 8)

# வினைத் திறன்காண் தடைப் பரீட்சை

(சுதுமலை)

சுகாதார போசாக்கு நலனோன்பு அமைச்சின் கீழ் உள்ள வைத்திய சாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமைபுரியும் குடும்பநல சேவை உத்தியோகத்தர்களுக்கு வகுப்பு 2 (அ)க்கு தரம் உயர்த்துவதற்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து சுகாதார போசாக்கு நலனோன்பு அமைச்சு கோரியுள்ளது.

இப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறும் இத்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் சுகாதார போசாக்கு நலனோன்பு அமைச்சின் பரீட்சைகள் பிரிவு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில், எழுத்து செய்முறை மற்றும் வாய்மூலமான பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-252)

## பியர் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

1220 பியர் போத்தல்கள் கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாய் வீதியில் வைத்து யாழ்.பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அனுமதி இன்றி 1220 பியர் போத்தல்கள் லான்மாஸ்ரரில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏற்றிச் சென்ற வேளையிலேயே பியர் போத்தல்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். லான்மாஸ்ரரை ஓட்டிச் சென்றவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(அ-19)

# இராசி பலன்

**19.07.2005**
**(ஆடி 3, செவ்வாய்க்கிழமை)**
**திரயோதசி இரவு 10.12 மணிவரை**
**கேட்டை முற்பகல் 7.00 மணிவரை**
**மூலம் பின்னிரவு 5.43 மணிவரை**
**இராகுகாலம் 3.01 -4.31 மணிவரை**
**சுபநேரம் -10.31-12.01 மணிவரை**
**பிரதோச விரதம், சித்தாமிர்தம்**

**மேடம்:** சத்துரு பயம், புதியதிட்டமிடல், முயற்சி தாமதம், பிதாசிந்தை.

**இடபம்:** எதிர்பர்ராத பிரச்சினை, போசன சுகம், ஆரோக்கியக் குறைவு, திடீர் நன்மை.

**மிதுனம்:** நல்ல வரவேற்பு, குடும்ப மகிழ்ச்சி, எடுத்த கருமங்கள் கைகூடும், திடீர் பயணம்.

**கடகம்:** ஆரோக்கிய நிலை, பொருள் வருவாய், செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும்.

**சிங்கம்:** தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, வியாபார நன்மை, சொத்துப் பிணக்கு.

**கன்னி:** அற்பர் உறவு, பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம்.

**துலாம்:** இனிய அனுபவம், கூட்டுமுயற்சி, வாக்கு மேன்மை, தொழில் வருமானம்.

**விருச்சிகம்:** காரிய தாமதம், கௌரவக்குறைவு, பண விரயம், பிரயாணம்.

**தனுசு:** நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, விருந்துபசாரம், முயற்சி கைகூடும்.

**மகரம்:** பிதாசிந்தை, பிரயாணம், சுபசெலவு, உணர்ச்சி வசப்படுதல்.

**கும்பம்:** செல்வாக்கு, தொழில்சிந்தை, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும்.

**மீனம்:** சுபநிகழ்வு, உற்சாகம், தூரதேசச் செய்தி, காரிய அனுகூலம்.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

# பழுதடைந்த தொலைக்காட்சிப் பெட்டியை திருத்தப் பொலிஸாரை அழைத்த மூதாட்டி

## இத்தாலியில் சம்பவம்

(இத்தாலி)

திடீரென பழுதடைந்த தனது தொலைக்காட்சிப் பெட்டியைத் திருத்துவதற்குப் பொலிஸாரை அழைத்துள்ளார் இத்தாலியிலுள்ள வயோதிபப் பெண்ணொருவர்.

90 வயதான சோபியா டொரினோ எனும் இப் பெண் கடந்த வாரம் தனது அபிமான நிகழ்ச்சியொன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது திடீரென தொலைக்காட்சி பழுதடைந்ததால் அவசர பொலிஸ் பிரிவிற்கு தொலைபேசி மூலம் அழைப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

அங்கு விரைந்து வந்த பொலிஸ் அதிகாரிகளிடம் "தொலைக்காட்சியைத் திருத்திக் கொடுங்கள் இல்லாவிட்டால் இவ் நிகழ்ச்சியின் இறுதிப் பகுதியை பார்க்க முடியாது போய் விடும்" என்றாராம். அதற்குப் பொலிஸார் "வீட்டுப் பாவனைப் பொருட்களைத் திருத்துவதற்கு பொலிஸாரை அழைக்க வேண்டாம்" என அப் பெண்ணிடம் கூறிவிட்டு தொலைக்காட்சிப் பெட்டியையும் திருத்திக் கொடுத்துவிட்டு திரும்பிச் சென்றனர். (க-7)

# இடம்பெயர்ந்த முஸ்லிம் பிரதிநிதிகள் அடுத்தவாரம் புலிகளுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று அடுத்த வாரம் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

இச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இஸ்லாமிய நிவாரண அமைப்பு என்பன மேற்கொண்டுள்ளன.

இச் சந்திப்பின் போது, இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வது தொடர்பில் ஏற்பட்டுள்ள தடைகள் குறித்து விடுதலைப் புலிகளுக்கு எடுத்துக் கூறப்படுமென இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார். (ச-8)

# சமுர்த்தி வங்கி கட்டடம் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் வழக்கம்பரையில் சமுர்த்தி வங்கிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் மேற்கொண்டுள்ளார்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை வழக்கம்பரை சமுர்த்தி வங்கிக் கட்டடத்திற்கு 13 இலட்சம் ருபாவை ஒதுக்கியுள்ளது. (க)

# சுகாதாரப் பொதி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையும் கனடா செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களின் சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்காக சுகாதாரப் பொதிகள் கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் வடமராட்சிப் பகுதியில் 2 ஆவது கட்டமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய,

| பொருட்களின் வகை | 1-3 வரையான குடும்ப அங்கத்தவர்கள் அலகு | 4-6 வரையான குடும்ப அங்கத்தவர்கள் அலகு | 7க்கு மேற்பட்டவர்கள் அலகு |
|---|---|---|---|
| வாசனை சவர்க்காரம் | 3 | 6 | 9 |
| சலவை சவர்க்காரம | 2 | 4 | 6 |
| பற்பசை | 3 | 6 | 9 |
| பற்தூரிகை | 3 | 6 | 9 |
| சுகாதார துவாய் | 15 | 30 | 45 |
| துவாய் | 3 | 6 | 9 |
| சவர அலகு | 3 | 6 | 9 |
| சம்போ 200ml | 1 | 2 | 3 |
| றப்பர் சிலிப்பர்(சோடி) | 3 | 6 | 9 |

என்ற அடிப்படையில் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)


## உடன் விற்பனைக்கு உண்டு

**பின்வரும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு**

- ஒவ்செற் பிளேற் (பாவித்தது)
- புத்தகம், கொப்பி என்பவற்றிற்கு கிளிப்பிடும் மெசின் (அச்சகங்களுக்குரியது, சிறிய திருத்தம் உண்டு)
- சிறிய ஜெனறேற்றர்(சிறீறாம் கொண்டா 650K)
- ஈய எழுத்துக்கள் வைக்கப்படும் கேஸ் (பலகையினாலானது)
- கோழிக்கூடுகள் மற்றும் கதிரைகளுக்கான பாலைத்தடிகள்
- வெற்றுப் பைவர்கள் (5 லீற்றர்)

**மலிவான விலையில் வழங்கப்படும். பார்வையிடும் நேரம் தினசரி மாலை 4.00 மணிக்குப் பின்னர்.**

தொடர்பு:-
விற்பனை முகாமையாளர்
வலம்புரி
இல 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்)

# ஜனாதிபதி — தயா சந்தகிரிக்கு இடையில் முறுகல் நிலை மேலும் முற்றுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவுக்கும் முப்படைகளின் தள பதியான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரிக்கும் இடையே முறுகல் நிலை தீவிரமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த புதன்கிழமை ஜனாதி பதி மாளிகையில் நடைபெற்ற இராணுவத் தளபதிகளுடனான அவ சர கூட்டதகில் இராணுவத்திற்கான புதிய கொள்வனவு நடவடிக்கைக ளுக்கு ஜனாதிபதி சந்திரிகா தடை விதித்துள்ளார்.

தற்போது கொள்வனவுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவுகளைத் தவிர புதிய உத்தரவுகளுக்கு அவர் தடைசெய்துள்ளார். நிதி நெருக் கடிகளைக் காரணம் காட்டியே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இத்தடையை விதித்திருந்தாலும் தயா சந்தகிரியின் கடந்தகால கொள் வனவுகளின் மீதான சந்தேகங் களே இந்தத் தடைக்கு உண்மையான காரணமென இராணுவத்தரப்புத் தக வல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இங்கிலாந்திட மிருந்து "சேர் கால்கெட்" என்ற பாரிய கபபலை கொள்வனவு செய்ய தயா சந்தகிரி திட்டமிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதியுட னான சந்திப்பில் இராணுவத் தள பதி சாந்த கொட்டேகொட, முப்ப டைகளின் தளபதியும் கடற்படைத் தளபதியுமான தயா சந்தகிரி, விமா னப் படைத்தளபதி டொனால்ட் பெரேரா ஆகியோர் பங்கேற்றுள்ள னர்.

கடற்படைக்கான கொள்வனவு களுக்கானவை எவையும் உரிய மதிபபீடுகளின் அடிப்படையில் இல் லாததுடன் கடந்த காலங்களில் பெரும்தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் பயன்ப டுத்தப்படாமல இருப்பதையும் மதிப் பீட்டுக்குழுக்கள் கண்டுபிடித்து புதிய கொள்வனவுக்குத் தடைவிதிக்கப் பரிந்துரைத்துள்ளன.

தயா சந்தகிரி இதுவரை இங் கிலாந்து நாட்டிலிருந்தே அனைத் தையும் கொள்வனவு செய்துள்ளார் என அக்குழு சுட்டிக்காட்டி இருக் கிறது. ரூ.658,366,100மதிப்பிலான தளபாடங்கள் இங்கிலாந்திடமி ருந்து கடந்த ஆண்டுகளில் கடற் படைக்கு வாங்கப்பட்டுள்ளன. இதற் கான பல்வேறு தரவுகளையும் தள பாடங்கள் பயனற்று இருப்பதற் கான ஆதாரங்களையும் சந்திரிகா குமாரதுங்க்விடம் மதிப்பீட்டுக்குழு அளித்ததாகவும் கூறப்படுகிறது.

இத்தகைய காரணங்களாலேயே ஜனாதிபதி சந்திரிகா, தயா சந்த கிரியின் கொள்வனவு வேட்டைக்குத் தடைவிதித்ததாக ஜனாதிபதிச் செயலக வட்டாரங்கள் தெரிவிக் கின்றன. (ற)

# சுபா சுந்தரம் காலமானார்

(இந்தியா)

ராஜீவ்காந்தி கொலை வழக் கில் 10ஆண்டுகள் சிறையில் வாடிய தமிழக புகைபபடக் கலைஞர் சுபா சுந்தரம் செனனையில் கடந்த சனிக் கிழமை காலமானார்.

சென்னை கொட்டிவாக்கத்தில் வசித்துவந்த அவருக்கு கடந்த சனிக்கிழமை மாலை மாரடைப்பு ஏற்பட்டது. உடனடியாக வைததிய சாலையில்சோக்கப்பட்ட அவரை மருத்துவர்கள் பரிசோதனை செய் தனர். ஆனால் சுபா சுந்தரம் மரண மடைந்துவிட்டார்.

அவருக்கு மனைவி, ஒரு மகன் உணடு. ராஜீவ் கொலை வழக்கில சென்னை பூந்தமல்லி நீதிமன்றத் தால் சுபா சுந்தரத்திற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதை யடுத்து 10 ஆணடுகள் அவர் சிறை யில் இருந்தார். மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணையில் விடுத லையான சுபா சுந்தரம் தமது புகைப் படத் தொழிலை மீண்டும் மேற் கொண்டு வந்தார். அவரது இறுதி நிகழ்வுகள் நேற்று சென்னையில் நடைபெற்றன. (ற)

# தரம் மிக்க கல்வியை மேம்படுத்த அரசாங்கம் முன்னுரிமை வழங்கும்

(கொழும்பு)

தரம் வாய்ந்த கல்வியை மேம் படுத்துவற்கான நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கு மென ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் இடம்பெற்ற பொதுக்கூடடம் ஒன்றில் உரையாற் றும்போதே அவர் இக் கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

மூன்றாம் உலக நாடுகளில் இலங்கையின் கல்வித்தரமும் அதி உயர்நிலையில் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் துரதிஷ்டவச மாக 10ஆண்டு காலப்பகுதிகளில் இலங்கையின் கல்வித் தரம் பாரி யளவில் வீழ்ச்சியைக் கொண்டுள் ளது.

ஆகவே முனனா இருந்த நிலைககு கல்வியின் தரத்தை உயர்த்துவ தற்கான நடவடிக்கைகளை நாம் முனைப்புடன் எடுக்க வேண்டும் எனறு ஜனாதிபதி மேலும் தெரிவித்துள் ளார். (க-9)

# இடம்பெயர்ந்த மக்களின் இருப்பிட பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முன்னுரிமை அளிக்கிறது

## அமைச்சர் பேரியல் அஷ்ரப்

யுதத சூழ்நிலையாலும் சுனாமி அனர்த்தத்தினாலும் இடம்பெயர்ந்த மக்களின் இருப்பிடப் பிரச்சினை யைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங் கம் முன்னுரிமை அளிக்கின்றது என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரி வித்துள்ளார்.

தெஹியத்தவரண்டியவில் உள்ள கலாசார நிலையத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்கீழ் அம் பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 2 ஆயிரம குடும்பங்கள் கூரைத்தகடு களையும் 500மில்லியன் ரூபாவுக் கும் அதிகமான நிதி உதவியை யும் பெறவிருக்கின்றன.

வடபகுதியில் இடம்பெயர்ந்த வர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை காணித்தட்டுப்பாடாகும். ஆதலினால் அம்பாறை மாவட்ட கூட்டு அபிவிருத்தித் திட்டத்திற் கமையக் கிடைக்கப்பெறும் காணி கள் வீடுகளை நிர்மாணிப்பதற்கு நலலமுறையில் பயன்படுத்தப்படும் என்றார். (க-2)

# சாவ.வைத்தியசாலையில் விடுதி அமைக்க ஆசிய அபி. வங்கி ரூ.52 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யுதத்தினால் முற்றுமுழுதாகச் சேதமடைந்த சாவகச்சேரி வைத் தியசாலைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் நிக்கொட் நிறுவனத்தினால் 52 மில்லியன ரூபா செலவில் 48படுக்கை கள் கொண்ட ஆண், பெண்களுக் கான இரண்டுமாடி விடுதி அமைத் துக்கொடுக்கப்படவுள்ளது.

இதற்காக நிதி ஆசிய அபிவி ருத்தி வங்கியினால் ஒதுக்கப்பட் டுள்ளது. அத்துடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கான நிர்வாகக் கட்டடத்தை அமைத்துக்கொடுப்ப தற்கும் தண்ணீர் வசதியை ஏற்ப டுத்திக்கொடுப்பதற்கும் ஆசிய அபி விருத்தி வங்கியினால் நிதி ஒதுக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு குடும்பநல மாதர்களுக்கான விடுதி ஒன்றையும் 26இலடசம் ரூபா செல வில் கட்டிக்கொடுப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கிநிதி ஒதுக்கியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

# ஈக்கள் தப்பும் இரகசியம்

(கொழும்பு)

ஈயை அடித்துப்பிடிக்கும் முயறசி கடினமான ஒரு செயற்பாடாக உள் ளது. மனிதர்கள் எவ்வளவு முயன் றாலும் தாக்குதலிலிருந்து அது தப்பிவிடுகிறது.

ஈக்கள் இவ்வாறு தப்பிக்கொள் வதன் இரகசியம் என்ன என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். ஈக்கள் வெறுமனே பறப்பதற்குப் பதிலாகப் பாயவும் செய்கின்றன எனகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

அமெரிக்காவின் கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவகத்தைச சோந கிவினத் கார்ட் எனும் ஆராய்ச்சி யாளர் ஈக்களை நோக்கி வெவ்வேறு கோணங்களிலிருந்து தட்டுக்களை வீசி வளைவுகளை வீடியோவில் பதிவுசெய்தார்.

வீடியோ பதிவுகளை ஆராய்ந் ததன் மூலம் ஈக்கள் கால்களை யும் இறக்கையையும் பயன்படுத்தி தன்னை நோக்கிவரும் பொருட்க ளிலிருந்து அபபால் பாய்வது கண் டறியப்பட்டது. (க-9)

# சுனாமி பாதித்த பகுதிகளில் 1607 நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வருகை

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கபபட்ட பகுதிகளில் 995வீடு கள் பகுதியாகவும், 1607 வீடுகள் முற்றுமுழுதாகவும் சேதமடைந்துள் ளன.

இவ்வாறு முற்றுமுழுமையாகச் சேதமடைநத வீட்டு உரிமையாளர் களுக்கு 1607நிரந்தர வீடுகளைக் கடடிக் கொடுப்பதற்கு கியூமெடிக்கா, சேவாலஙகா, கரித்தாஸ், லயன்ஸ் கழகம், போரூட், வை.எம்.சி.ஏ., லீட்ஸ் (LEADS) போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

மேலும் கற்கோவளம், மருதங் கேணி, தும்பளை, பொலிகண்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித் துறை, அல்வாய், கரவெட்டி போன்ற பகுதிகளில் நிரந்தர வடுகளை அமைத் துக்கொடுப்பதற்கு பல அரச சார் பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ள போதிலும் தற்போது கியூமெடிக்கா, யு.என்.கபிற்றட், லீட்ஸ் (LEADS), போரூட் போன்ற நிறுவனங்கள் தமது வேலைத்திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

## 60 வீதமான இளைஞர்கள் போதைவஸ்துக்கு அடிமை

குறைந்த வருமானங்களையுடைய குடும்பஙகளைச் சேர்ந்த இளைஞர் களில் 60 சதவீதமானவர்கள் போதை வஸ்துப் பாவனையில் ஈடுபட்டுள் ளார்கள் என்று அண்மையில் எடுக் கப்பட்ட புள்ளிவிபரங்கள் தெரிவிப் பதாக போதைவஸ்து தடுப்புப் பிரி வினர் தெரிவித்துள்ளனர்.

இப்படியானவர்களில் அதிகமான வர்கள் மேல்மாகாணத்திலே உள் ளதாக போதைவஸ்தின் தடுப்புப் பிரிவின் திடட இணைப்பாளர் தெரி வித்துள்ளார்.

அதேவேளை, பெரும்பாலான போதைவஸ்துக்கள் தென்னிந்தியா விலிருநது இலங்கையின் மேற்குக் கரையோரப் பகுதியூடாகக் கடத்தப்படு வதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது.

கடந்த ஆண்டு மட்டும் 78கிலோக் கிராம் ஹெரோயின் போதைவஸ்துக கள கடத்தல காரர்களிடமிருநது கைப் பெற்றப்பட்டுள்ளன. (க-9)

# செயற்கை முறையில் இறைச்சி உற்பத்தி?

ஆய்வுகூடங்களில் செயற்கை யான முறையில் இறைச்சியை உற பத்தி செயவதற்கான புதிய தொழில் நுட்பமொன்றை விஞ்ஞானிகள் ஆராய்ந்துவருகின்றனர்.

இத்தொழில்நுட்பத்தின் மூலம விலங்குகளைக்கொன்று அவற்றின் இறைச்சியைப் பெறும் முறை என றாவது ஒருநாள் வழக்கொழிந்து போகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விஞ்ஞானிகள் ஏற்கனவே மாடு அல்லது கோழியின் தனியான தசைக் கலமொன்றின் மூலம் ஆயி ரக் கணக்கான கலங்களை உரு வாக்கமுடியும் என்பதை ஆய்வு கூடங்களில் செய்துகாட்டியுள்ளனர்.

எனினும் இத்தகைய இறைச்சி உடனடியாக சந்தைககு வரும் வாய்ப் பில்லை. இத்தொழில்நுட்பம் அதன் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது. இம்முறையின் மூலம பாரிய அள வில் இறைச்சி உற்பத்தி செய்ய முடியுமா? என்பதும் உறுதியாகத் தெரியவில்லை என பலர் கூறுகின் றனர்.

ஆனால், கைத்தொழில் ரீதியில் இதைப் பயன்படுத்த முடியும் என அமெரிக்காவின் மேரிலாண்ட் பல் கலைக்கழக ஆய்வாளர் ஜேலன் மெதனி கூறுகிறார். (க-9)

# பழைய விவசாய முறைமூலம் அதிக பயனைப் பெறமுடியும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் குள பிரதேசத்தில் கண்ணகி புரத்தில் அணமையில் விவசாய வயல்விழா வெகு விமரிசையாக இடம்பெற்றது.

இந்நிகழவிற்கு தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவன பொறுப் பாளா கரிகாலன் பிரதம விருந்தின ராகக் கலந்து சிறப்புரை வழங்கி னார்.

அவர் அங்கு உரையாற்றுகை யில தெரிவித்ததாவது, இன்று நமது விவசாயிகள் பழைய முறையிலான விவசாய முயற்சிகளை கைவிட் டுள்ளனர்.

முன்னைய விவசாய முறைக ளின் மூலம் மண் வளத்தைப் பெறு வதுடன் அறுவடையிலும் அதிக பயனை பெறமுடியும். இதற்கு இவ் விவசாய அறுவடை விழா சான்று பகிர்கிறது.

முன்னைய விவசாய முறை களையும் இயறகைப்பசளை வகை களையும் எமது விவசாயிகள் கூடு தலாகப் பின்பற்ற முன்வர வேண் டும். விவசாயத்தில் தன்னிறைவு பெற்றவாகளாக நாம் மிளிர வேண் டும் என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

கிளிநொச்சி நீர்ப்பாசன பொறி யியலாளர் கந்தசாமி கிளிநொச்சி பிராந்திய ஆணையாளர் இராமச் சந்திரன், உதவி விவசாய பணிப் பாளர் வீ.ஆனந்த சர்மா உட்பட பலரும் இந்நிகழ்வில் உரையாற் றினர்.

அககராயன் விவசாய போதனா சிரியர் உட்பட பெருமளவு விவசா யிகளும் விவசாயத் திணைக்களம் மற்றும் பொருண்மிய நிறுவன உத் தியோகத்தர்களும் கலந்து கொண் டனர். (க-7)

# 100 மில்லியன் டொலரை இந்தியா வழங்கும்?

(கொழும்பு)

கொழும்பு மற்றும் புகையிரத பாதையை நவீனமயப்படுத்தும் பணிகளுக்கு இலங்கைக்கு உதவு வது குறித்து இந்திய அரசு பரிசீ லித்துவருவதாக இராஜதந்திர வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்படவிருக்கும் 100 மில்லி யன் அமெரிக்க டொலரையும் புகையிரதப் பணிகளுக்காக அரசு ஒதுக்கீடு செயயும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.

இந்தவிடயம் தொடர்பாக இந் திய அமைச்சரவை மட்டத்தில் இலங்கை பேச்சுவார்த்தையை நடத் தியுள்ளது. இதனை அடுத்து இந் திய புகையிரத நிபுணர்கள் மிகவிரை வில் இலங்கை வருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (க-9)

## இன்று ஒரு தகவல்

# நன்னயம்

நம்மிடம் ஒருவன் தவறாக நடந்து கொண்டால் நாம் உடனே என்ன செய்வோம்? கையை ஓங்கிக்கொண்டு அவனை அடிக்கப்போவோம். நாமும் அவனிடம் அவனை விட ஒரு படிமேலாக தவறாக நடந்து கொள்வோம். ஆனால் பெரியவர்கள் எல்லாம் அப்படி நடந்துகொள்வதில்லை. "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்று வள்ளுவர் சொன்னார் அல்லவா. அதற்குத் தகுந்த மாதிரி நடந்துகொள்வார்கள். பாயஸீத் பிஸ்தாமி என்பவர் ஒரு பெரிஞானி. அவர் ஒரு நாள் இரவு நீண்ட நேரம் மசூதியில் இருந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தார். வழியில் ஒரு குடிகாரன். அவன் கையில் ஒரு இசைக் கருவி. அதைக் கன்னாபின்னாவென்று மீட்டிக்கொண்டு வாய்க்கு வந்த படி எதையோ பாட்டு என்று நினைத்துப் பாடிக்கொண்டிருந்தான். அதோடு நின்றாலும் பரவாயில்லை. அந்தப் பக்கமாக வழியில் போவோர் வருவோரையெல்லாம் பார்த்து கண்டபடி ஏசிக்கொண்டிருக்கிறான்.

பாயஸீத் அந்த வழியாகப்போகிறார். அவனைப் பார்த்தார். அவனது நிலையைக்கண்டு பரிதாபப்பட ஆரம்பித்தார். "ஏனப்பா இது மாதிரியெல்லாம் நடந்து கொள்ளலாமா?" என்று ஏதோ புத்திமதி சொல்ல ஆரம்பித்தார். அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. கையில் வைத்திருந்த வாத்தியக்கருவியால் அந்த பெரியவரின் தலையில் ஓங்கி அடித்துவிட்டான். ரத்தக் காயம் ஏற்பட்டுவிட்டது. அவன் கையில் இருந்த இசைக்கருவியும் அடித்த வேகத்தில் இரண்டாக உடைந்துவிட்டது. அவ்வளவு வேகமாக அடித்திருக்கிறான்.

இவ்வளவு தூரத்திற்கு நடந்தும் அந்த மாபெரும் ஞானி வாய்திறந்து ஒரு வார்த்தைகூட பேசவில்லை. பேசாமல் தலையைப்பிடித்துக்கொண்டு போய்விட்டார். மறுநாள் அந்த பெரியவர் என்ன செய்தார் தெரியுமா? கொஞ்சம் இனிப்புப் பண்டங்கள், கொஞ்சப் பணம் இவை இரண்டையும் ஒரு ஆள் மூலம் அனுப்பி வைத்தார் அந்தக்குடிகாரனுக்கு. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை! என்ன விபரம் என்று விசாரித்தான் அந்த ஆள். ஒரு கடதாசியை நீட்டினார் அதில் விபரம் இருந்தது. ஞானி எழுதியிருந்தார் "உங்களுடைய இசைக்கருவி உடைவதற்கு எனது தலை காரணமாக இருந்துவிட்டது. அதற்காக நான் மிகவும் வருத்தமடைகிறேன். அதற்காகத்தான் பணம் அனுப்பியிருக்கிறேன். வேறு ஒன்று புதிதாக வாங்கிக்கொள்ளுங்கள். அதன் பின் இன்னொரு விடயம் நேற்று இரவு என்னிடம் ஏகப்பட்ட கசப்பான வார்த்தைகளை என்னிடம் நீங்கள் பேசியதாக நினைக்கிறேன். இத்தோடு அனுப்பியிருக்கும் இனிப்புப்பண்டங்களை சாப்பிட்டு உங்கள் நாவில் உள்ள கசப்பை மாற்றிக்கொள்ளுங்கள்" என்று எழுதியிருந்தது அந்தக் கடதாசியில்.

இந்த சமயத்தில் அவன் குடி மயக்கத்தில் இல்லை. தெளிந்துபோயிருந்தான். அதைப் படித்தவுடன் அவனுக்கு மிகவும் வெட்கமாகிவிட்டது. தலையைக்குனிந்து யோசித்தான். கொஞ்ச நேரத்தில் தன்னுடைய நண்பர்கள் சிலரையும் கூட்டிக்கொண்டு அந்த ஞானிகள் இருக்கும் இடம் தேடிப்போனான். அவரிடம் மன்னிப்புக்கேட்டான். "பெரியவரே! தெரியாமல் இந்தப் பாவச்செயலைச் செய்துவிட்டேன். என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். உங்கள் பொறுமையும் போதனையும் எனது கண்ணைத்திறந்துவிட்டது. இனி நானும் எனது நண்பர்களும் நல்ல வழியில் திருந்தி வாழப் போகிறோம்" என்றான். ஞானி செய்த "நன்னயம்" குடிகாரனை எப்படித் திருத்தி இருக்கிறது பார்த்தீர்களா?

இந்தக் கதையைக் கேட்டுவிட்டு ஒருவர் சொன்னார் "என் வாழ்க்கையில் கூட அப்படி ஒரு சம்பவம் நடந்தது சார்... நானும் ஒரு நாள் இரவு அதிகமாகக் குடித்துவிட்டு ஒரு கிற்றாரை வைத்துக்கொண்டு கனனாபின்னா வென்று உளறிக்கொண்டு திட்டிக்கொண்டிருந்தேன். அந்த சமயம் அந்த வழியாக ஒருவர் வந்தார்.

தலையில் ஓங்கி ஒரு அடி. ரத்தம் வந்துவிட்டது. அதன் பின் என் மனம் திருந்திவிட்டது சார்" என்றார். 'அப்படியா?' என்றேன் ஆச்சரியமாக. "ஆமாம் சார்! அடி விழுந்தது அவர் தலையில் இல்லை சார்! என் தலையில்! வந்தவர் என்னை அப்படி அடித்துவிட்டார். சார் மயக்கம் தெளிந்த பின்புதான் எனக்கு விபரம் புரிந்தது. அவர் ஒரு பொலிஸ்காரர்" என்றார் சோகமாக.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எமது வாழ்வையும் உரிமைகளையும் நாமேதான் தீர்மானம் செய்ய வேண்டும்

## புதுவை இரத்தினதுரை

(கிளிநொச்சி)

**எமது வாழ்வையும் உரிமைகளையும் வேறு எவரும் தீர்மானம் செய்ய முடியாது. அதனை நாமேதான் தீர்மானம் செய்யவேண்டும். இந்த உண்மையைத்தான் இன்றைய எமது அரசியல் கள நிலைவரம் உணர்த்தி நிற்கின்றது என கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவித்துள்ளார்.**

**கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கடந்த சனிக்கிழமை பி.ப.3.30 மணியளவில் நடைபெற்ற "பூவரசம் வேலியும் புலினிக்குஞ்சுகளும்" கவிதை நூல் அறிமுக விழாவிலேயே கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு தெரிவித்தார்.**

கடந்த மூன்றரை வருடப் போர் ஓய்வு காலத்தில் எமது மண்ணின படைப்பாளிகள், எழுத்தாளர்களின் சோர்வடைந்த நிலைமையினையே காணமுடிந்தது. இனி நாம் முன்னைய உத்வேகத்துடன் செயற்படவேண்டிய காலம் வந்துவிட்டது. எனவே, மீண்டும் மிடுக்குடன் எழுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

எழுகலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த நிகழ்விற்கு எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமை தாங்கினாா.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கலைவாணன் ஏற்ற தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழக்காவல்துறை துணைப் பொறுப்பாளர் மாதவன் ஏற்றி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து வரவேற்புரையினை கவிஞர் வேலணையூர் சுரேஸ் நிகழ்த்த அறிமுக உரையினை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் யோகரட்ணம் யோகி நிகழ்த்தினார்.



தமிழீழ அரசியல் துறைததுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் சிறப்புப் பிரதிகளை வழங்கிக் கௌரவித்ததைத தொடர்ந்து மதிப்பீட்டுரையினை பு.சத்திய மூர்த்தியும ஏற்புரையை நூலாசிரியர் புதுவை இரத்தினதுரையும் நன்றியுரையினை எழுத்தாளர் திருமதி ஆதிலட்சுமி சிவகுமாரும் நிகழ்த்தினர்.

இந்நூல் அறிமுக விழாவில் இலக்கிய ஆர்வலர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க-4)

# யுத்த நிறுத்த உடன்படிக்கையை பாதுகாக்க ஐ.தே.க ஒத்துழைக்கும்

## ஜீ.எல். பீரிஸ் உறுதி



(கொழும்பு)

இடை நிறுத்தப் பட்டுள்ள சமாதான பேச்சுவார்த்தை தொடர்ந்து முடங்கிப் போகும் நிலமை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகள் அச்சுறுத்தலுக்கு உள்ளான நிலையில் உள்ளன. இதனால் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்தும் கடைப் பிடித்துச் செல்வதே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையைத் தரும் என ஜீ.எல்.பீரிஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை பேணிப் பாதுகாப்பதற்கு ஐக்கியதேசியக் கட்சி தன்னாலான சகல ஒத்துழைப்புகளையும் வழங்கி அரசுடன இணைந்து செயற்படும்.

சமாதான முயற்சி, யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பில் அரசுக்கும் புலிகளுக்குமிடையே பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றது. இந்த நிலைப்பாட்டினால் சமாதானச் செயற்பாடுகள் முடங்கிப்போகலாம். அவ்வாறு சமாதான செயற்பாடுகள் முடங்கிப்போனால் மீண்டும் ஓர் போர் ஏற்படக்கூடிய நிலமை ஏற்படும் .

போர் நிறுத்த ஒப்பந்தம் அச்சுறுத்தலான நிலைக்கு வர அரசே காரணம். தெளிவற்ற கொள்கைகள், நீண்டகால வேலைத்திட்டங்கள், சரியான முகாமைத்துவம் இல்லாததினால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததைப்போன்று சமாதானம், யுத்த நிறுத்தம் என்பனவும் வீழ்ச்சியடையும் எனவும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (க-8)

# மங்கள, மகிந்த, வீரவன்ச நடத்திய இரகசிய ஆலோசனைக் கூட்டம்!

## ஐ.ம.சு.மு. அரசைக் கவிழ்க்கத் திட்டம்



(கொழும்பு)

அமைச்சர் மங்கள சமரவீர ,பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே. வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவனச மற்றும் றுவான் பெர்டி னாண்ட்ஸ ஆகியோர் கடந்த வாரம் இரகசிய ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

தனது இந்திய பயணத்துக்கு முன்னதாக தமிழ் வர்ததகர் ஒருவரின் இல்லத்தில் இந்த இரகசிய சந்திப்பினை மஹிந்த ராஜபக்ஷ நடத்தியுள்ளார்.


ஜனாதிபதித் தேர்தலில் தன்னை வேட்பாளராக்குவதற்கான நடவடிக்கைகள் குறித்து இக் கூட்டத்தில் ராஜபக்ஷ விவாதித்துள்ளார்.



கூட்டத்தில் பேசிய சமரவீர, ஜனாதிபதித்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவெற்றி பெறும் நிலையில் பிரதமர் பதவியை அனுரா பணடாரநாயக்கவுக்குக் கொடுப் பது என்ற வாக்குறுதியின் மூலம் அனுராவை சமாதானப் படுத்தி யோசனை கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களில் சிலவற்றை பிரதமருக்கு மாற்றுகிற திருத்தங்களை பிரதமா செயல்படுத்தினால் அனுரா பண்டார நாயக்கவை போட்டியிலிருந்து வெளியேற்றுவது என மங்கள சமரவீர கருத்துத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இப்படியான திருத்தத்தை மேற்கொண்டால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பலம் அரசிலும் ஆட்சியிலும் வலுவிழந்து விடும் என்றும் மங்கள சமாவீா சுட்டிக் காட்டியள்ளார்.



இதற்கிடையில் அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் பிரதமர் பதவியை எதிர்பார்ப்பதாக மஹிந்த ராஜபக்ஷ இக் கூட்டத்தில் கூறினார். இதை உடனே நிராகரித்த மங்கள சமரவீர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் அனைத்து உறுப்பினர்களுமே அதிகாரத்தை மையமாக வைத்துத்தான் செயல்படுவார்கள் என்றும் இது குறித்து நீங்கள் அச்சப்பட வேண்டியதில்லை என்றும் ஆலோசனை கூறியுள்ளார்.

மங்கள சமரவீரவின் கருத்துகளை ஆதரித்துப் பேசிய விமல் வீரவன்ச, இந்த ஆண்டு இறுதிககுள் எப்படியாவது ஜனாதிபதித் தேர்தலை நடத்தியாக வேண்டும். அரசுக்கும் ஜே.விபிக்கும் இடையேயான பிளவு அதிகரித்து வரும் நிலையில் மஹிநத ராஜபக்ஷவை ஆதரிப்பது குறித்து வெளிப்படையாக அறிவிப்பதோடு அவருடன் புரிந்துணர்வு ஒப்பந்தததில் கையெழுத்திடவும் தயாராக இருக்கிறோம என்றும் விமல் வீரவன்ச தொிவித்துள்ளார்.

ஆனால் பிரதமர் தான் எடுக்கும் முடிவுகளில் நல்லதோ கெட்டதே உறுதியாக இருக்க வேண்டும் என்றும் விமல் வீரவன்ச வலியுறுத்தினார்.

இந்த ஆலோசனைகளைக் கேட்டுக்கொண்ட மகிந்த ராஜபக்ஷ தனது இந்தியப் பயணத்தை நிறைவு செய்த பின் ஜனாதிபதி தேர்தல் பரப்புரைப் பயணத்தைத் தொடங்கலாம் என்று கூறி இந்தஇரகசிய அலோசனைக் கூட்டக்கை நிறைவு செய்கார். (க-4)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

# ஆழிப் பேரலையிலும் அசையாத நம்பிக்கை

என். விஜயன்

37 மீண்டும் மிடுக்குடன்...

பல்லவர்கால சிற்பங்களின் கோட்டையாக இருக்கும் மாமல்லவபுரத்தில் தான் அருச்சுனன் பாசுபதம் பெற்றான் என்ற வரலாறும் உண்டு.

அருச்சுனன் பாசுபதம் பெற்றதை

வைத்து பலூனை இலக்குவைத்துச் சுடும் விளையாட்டை நடத்திக் கொண்டிருந்தார்.

யாரேனும் பலூனை இலக்குவைப்பதாயின் பலூனுக்குரிய கட்டணத்தையும் துவக்கைப் பாவிப்பதற்கான கட்




மாமல்லவபுரத்தில் புலிக்குகை

நினைவுறுத்துவதாகவே கற்தேர் செதுக்கப்பட்டதாகக் கூறப்படும் கதைகள் வரலாற்றில் இடம்பிடித்துள்ளன.

இத்தகைய பெருமைக்குரிய மாமல்லவபுரத்தின் கடலோரம், ஆழிப்பேரலையால் அழிவுற்றுப் போனாலும், கடலோரத்தின் காட்சியை இரசிக்க வருகின்றவர்களுக்கு குறைவேயில்லை.

என்னைத்தேடி வந்திருக்கிறார்களே! என்ற ஆனந்தமோ! தெரியவில்லை.

மாமல்லவபுரக் கடலோரத்திலுள்ள கற்கோவில்



கடலலை எங்கள் இருப்பிடத்தை நோக்கி வருவதும், போவதுமாக இருந்தது.

கடலலை, கால்களை முத்தமிடும் புதுக்கதை... என்ற பாடல்வரிகளே

ஆற்றுப்படுத்த முடியாமல் அந்த முதியவர் நெருடிக்கொண்டார்.

அந்த நெருடலின் இறுக்கம் இளகுவதற்கு சில நிமிடங்கள் ஆகின.

மீண்டும் அவரைப் பேச வைப்பதற்

நினைவுக்கு வந்தன. அந்த நினைப்போடு அருகில் இருந்த ஒரு முதியவரிடம் குரல்கொடுத்தோம்.

ஐயா, நீங்கள்... எங்கள் கேள்வி முற்றுப்பெறுவதற்குள் அந்த முதியவர் நான் மாமல்லவபுரம் தான் என்றார். அப்படியா உங்கள் இடத்தைப் பற்றிக் கூறுங்களேன். பி.பி.சி.ஆனந்தி போல் அவசரப்பட்டுக் கேட்டோம். ஏன் நீங்கள் பார்க்கவில்லையா...? 'பல்லவ மன்னர்களின் கோட்டையாக இருந்ததுதான் இந்தப் புண்ணிய பூமி. அதோ! தெரிகிறதே கோவில், கருங்கல்லால் மட்டும் கட்டப்பட்டது.இப்போ

காக, என்ன சாமி செய்யிறது இயற்கையின் நியதி அப்படிப் போலும்.

சிலப்பதிகாரத்திலும் கடல்கோள் பற்றிப் பேசியிருக்கிறார்களல்லவா? முதியவர் என்னை நோக்கினார்.

எதுவும் பேசவில்லை. தலையை மட்டும் மேலும் கீழுமாக அசைத்தார்.

அமைதியாக இருந்த அவர் திடீரென தொலைவிலுள்ள கடலோரத்தின் ஒரு பகுதியைக் காட்டி, அங்க பாருங்கப்பா! சுனாமி வந்தாப்பிறகு கடல் பின்னாடி போயிருச்சு.

அந்த இடத்தில இப்ப ஆய்வு செய்



குரங்கின் குடும்பப் பாசம் கருங்கல்லில் தெரிகிறது

உல்லாசப்பயணிகளின் வருகையால் தம் வாழ்வியலை நகர்த்தும் கடலோர வியாபாரிகள் ஆழிப்பேரலையால் அடிபட்டுப்போன கட்டடங்களின் மேடுகளில் தம் பணியை செம்மையாகச் செய்கின்றனர்.

கடைகள் மற்றும் இருப்பிடங்களைப் பேரலை அள்ளிச்சென்றாலும் அவர்களின் மன உறுதியையும் தன்னம்பிக்கையையும் எந்த அலையாலும் எதுவும் செய்யமுடியாதென்பது போல, மீண்டும் மிடுக்குடன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பல்பொருள் அங்காடிகளாகக் காட்சி தந்த, விற்பனைப் பகுதிகளைக் கடந்து சென்றால் மாமல்லவபுரத்தின் ஆழக்கடல், கரையோரத்தில் மக்கள் கூட்டம், வேடிக்கை விநோதங்கள்.

குதிரைகளில் சிறுவர்களை ஏற்றி வலம் வந்து பணம் உழைக்கும் இளைஞர்கள் என ஒருபுறம் மக்கள் கூட்டம் களைகட்டியிருக்க, மறுபுறத்தில் பலூன் வியாபாரி ஒருவர் பலூன்களை ஊதி கிடையான ஒரு தடியில் கட்டிவிட்டு துவக்கொன்றில் மருந்தை

டணத்தையும் கொடுக்கவேண்டும். இந்த வேடிக்கை விளையாட்டை சில நேரம் நின்று அவதானித்தோம்.

பொறுமையை இழந்த தம்பி இராஜேஸ்வரன் காசைக் கொடுத்துவிட்டு களத்தில் இறங்கிவிட்டார்.

மூன்று நான்கு தடவைகள் அவரின் இலக்கு பலூனைப் பதம் பார்த்தது. ஏனைய வேட்டுக்கள் வெறும் சத்தங்களாகக் கேட்டனவே தவிர, பலூனைக் கிட்டவும் நெருங்கவில்லை.


இது அவரின் இலக்கின் தவறல்ல. வியாபாரியின் தந்திரம்.

மூன்று நான்கு வேட்டுக்களை மட்டும் வைத்துவிட்டு மற்றவற்றை வெறும் சத்தவேட்டாகவே செய்துள்ளார்.

இதனால் மிகுதியாகவுள்ள பலூன்கள் அவருக்கு இரட்டிப்பான இலாபத்தைக் கொடுக்கும். இந்த ஏமாற்று நாடகத்தை மாமல்லவபுரக் கடலோரத்தில் தரிசித்தபடியே கடற்கரை மண்ணில் அமர்ந்து கொண்டோம்.

கடலின் எல்லைக்கு அருகில் நாம் அமர்ந்து கொண்டதன் கோபமோ அன்றி, யாழ்ப்பாணத்தில் இருந்து

பால் கறக்கும் மனிதன் பாசம் பொழியும் பசு



பராமரிப்பு இல்லை. என்ன செய்வது சுனாமி வந்திருச்சே'

கூடவே பெரியவரின் சோகப் பெருமூச்சு. சுனாமிக்கு முதல் இந்த இடம் எவ்வளவு அழகாக இருந்தது. என்ன செய்வது எல்லாம் போச்சு... மாமல்லவபுரத்தின் செல்வாக்கே போச்சு... ஆழிப்பேரலையின் அனர்த்தத்தை

யிறாங்க. நிறைய கற்சிலைகள் கடலுக்குள்ள புதையுண்டு கிடக்கு... சிலை மட்டுமல்லயிங்க கற்கோவில் கூட கடலுக்குள்ள அமிழ்ந்து போயிருப்பதாகப் பேசிக்கொள்கிறாங்க.

முதியவர் மூச்சுவிடாமல் கூறினார். அட அப்படியா ஆச்சரியத்தோடு கேட்டோம்.

(வளரும்)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2005

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2005

### தமிழ்மொழியும் இலக்கியமும்

**பகுதி - II** **நேரம்:- 2மணித்தியாலம்**

**01. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிந்து 250 சொற்களுள் எழுதுக. பொருத்தமான தலைப்பிடுக.**

(அ)இன்றைய உலகு பல இயற்கை அனர்த்தங்களை அன்றாடம் எதிர்கொண்டு வருகிறது. இந்நிலை தொடருமானால் எதிர்காலம் கேள்விக்குரியதாகி விடும். இத்தகைய அனர்த்தங்கள் ஏற்பட முதற் காரணியாக அமைபவன் மனிதனே ஆவான். எனவே உலகைக் காப்பது ஒவ்வொரு தனிமனிதனதும் தலையாய கடமை என்பதை வலியுறுத்தி நீர் ஆற்றவுள்ள உரையொன்று.

(ஆ)திடீரென தொடந்து மூன்று நாட்கள் ஹர்த்தால் (கதவடைப்பு) என அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக உமது சூழலில் உடனடியாக ஏற்பட்ட பரபரப்புகள். அதன் பின்னரான நிலைமைகள் யாவற்றையும் கண்டவர் என்ற வகையில் அவை பற்றிய விபரணக் கட்டுரை.

(இ)இலத்திரனியல் சாதனங்களின் வருகை நாளிற்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளன. கவர்ச்சிகரமான விளம்பரங்களும் செய்யப்படுகின்றன. இன்று, பல குடும்பங்களில் இவற்றின் செல்வாக்கு அதிகரிக்கப்பட்ட நிலையிலுள்ளது. இதனால் குடும்பங்களில் தோன்றும் சாதக பாதக விளைவுகளை எடுத்துக்கூறும் வகையில் குடும்பஸ்தர் இருவரிடையேயான ஓர் உரையாடல்.

(ஈ)வழமை போல் அன்றும் இயற்கை தன் கடமைகளை ஆற்றுகிறது. நிசப்தமாக இருந்த கடலன்னை வழமைக்கு மாறாக, எதிர்பாராத வகையில் தனது சீற்றத்தைக் காண்பிக்கிறாள். அச்சீற்றம் இன, மத, மொழி வேறுபாடின்றி, வயது வேறுபாடின்றி உயர்வுதாழ்வு பாராது ஏன் எதனையுமே பாராது ஆட்டம்காண வைக்கிறது. தன்னால் வளர்நதோரை தன் அலைக் கரங்களை உயர்த்தியும் நீட்டியும் தன்னோடணைக்கிறது. ஊழித்தாண்டவத்தில் உலகம்... ஆனால் இன்று எதுவும் செய்யாதவள் போல் மிக அமைதியாக ஆனந்தமாகக கடலன்னை... அனர்ததங்களுக்கு முகங்கொடுத்து இடைத்தங்கள் முகாமில் இருந்து கடல் பார்த்துக் கதை கூற விழைகிறான் ஒரு மைந்தன்.. கதையைத் தொடர்ந்து எழுதுக.

*(30புள்ளிகள்)*

**02. கீழே தரப்பட்டுள்ள (அ), (ஆ), (இ), (ஈ) உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை 15-20 சொற்களில் சுருக்கி எழுதுக.**

(அ)மனித இனம் காட்டுவாழ்க்கை மேற்கொண்டிருந்த காலந்தொட்டு இன்று வரை புறவாழ்வில் முன்னேற்றமடைந்துள்ளது. அந்தளவிற்கு அகவாழ்வில், பண்பாட்டில் முன்னேறவில்லையென்பது கண்டுகூடு. பரந்த மனப்பான்மை 'வாழ்; வாழவிடு' என்ற கொள்கை ஊட்டம் பெறவில்லை; உதட்டளவில், ஏட்டளவில் நின்றவிட்டது. 'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று; இவ்வுலகத்தியற்றை என்ற புறநானூற்றுக் கருத்து இன்றளவும் உண்மையாய் இருத்தலைக் கண்டு பெரிதும் வியக்கின்றோம். மக்கள் மனவியல்பினை உள்ளவாறுணர்ந்த வெளிப்படுத்தி, திறமறிந்து பாராட்டுகிறோம். மக்களிடையே, ஆள்பவரிடையே மட்டுமன்றி, நாடுகளிடையே வல்லரசுகளுக்கிடையே போர் நடைபெறுமளவிற்கு 'உலகப்போர்கள்' என்று வரலாறு எழுதுமளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

(ஆ)மிகமிக உயரமாகப பறக்கக்கூடியவை இராஜாளிப்பறவைகள். அவற்றைப் போன்று மானிடரின் உள்ளம் உயர்ந்து விளங்கவேண்டும். 'வெள்ளத்தனைய மலர் நீட்டம்; மாந்தர்தம் உள்ளத்தனைய துயர்வு' என வள்ளுவன் கூறவில்லையா? உயரப் பறக்கும இராஜாளியின் கண்களுக்கு மேடு, பள்ளம், வீடு, காடு, கழனி எல்லாம் ஒரே பார்வையில் தெரிந்து விடுமல்லவா? அதுபோல, உலகினை, உலகமக்களை, உலகமககள் உள்ளங்களை ஒரே நோக்கிற் பார்க்க வேண்டும்; பார்த்தறிந்து செயற்பட வேண்டும. உலக நோககு உள்ளவன் எப்போதும் உயர்ந்துகொணடே இருப்பான் என்பது உலகப் பொதுவிதி.

(இ)நமது வீட்டின் அயல்களிலும் சுற்றுபபுறங்களிலும் மரம்செடிகளை அதிகமாக வளர்த்தல் வேண்டும். ஏனெனில், நமக்கு வேண்டிய உணவை மாத்திரமன்றி நம் உயிர்வாழ்வுக்கு இன்றியமையாத தூயகாற்றையும் மரஞ்செடிகொடிகளினாலேயே பெறுகிறோம். இவ்வோரறிவுயிர்களாகிய மரம்செடிகொடிகள உலகில் மகுந்து காணப்படாமல், ஏனை உயிர்த்தொகுதிகள மிகுந்து காணப்படுமாயின் அவ்வுயிர்த்தொகுதிகள் வெளியிடும் நச்சுக்காற்றை அவையே மண்டும் மீண்டும் உட்கொண்டு அதனால் நோய்வாய்ப்பட்டுச சின்னாளில இறந்தொழியும். ஆனால், ஓரறிவுடைய மரஞ்செடிகளோ மற்றைய உயிர்கள் வெளியிடும நச்சுக்காற்றை தாம் உட்கொண்டு அதனைத் தூய தாக்கி மறுபடியும் அவ்வுயிர்கள் உட்கொள்ளுமாறு உதவுகின்றன. இவ்வுண்மையை நகர, நாட்டுப்புற மக்களது உடல் நலத்திலிருந்து அறியலாம்.

(ஈ)படிக்கப் புகும் ஒவ்வொருவரும் முதலிலே சிறந்த நூல்களையே கற்றல் அவசியம். இலலையேல், அவற்றைப் படிக்கும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்காமலும் போகலாம். எனவே, முதலில் எவையெவை நல்ல நூல்களென்பதை தீமானித்தல் வேண்டும். அதற்கு நூலாராய்ச்சியில் அனுபவம் பெற்ற அறிஞரது துணை நாடல் அவசியம். இங்ஙனம் தேர்நதெடுக்கும் நூல்களை அவாவோடும் ஊக்கத்தொடும் சலிப்பின்றி நன்கு படித்தல் வேண்டும். சில வேளைகளில் படிப்பவர் மனம் சலிப்படையுமெனினும் அறிவு முதிர்சசியை விரும்பி உழைத்துப் பொறுமையோடு பயிலல் கடடாயமானது. ஊக்கம், பொறுமை கொண்டவன் இறுதியில் அறிஞனாவான். *(20புள்ளிகள்)*

**03. பின்வரும் செய்யுட் பகுத'யைப் படித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

எல்லை அறியாப் பொருங்கடலே - நீதான்
இரவும் உறங்கா யோகடலே
அல்லும்பகலும் அலைகடலே - உனக்கு
அலுப்பு இலையோ கருங்கடலே

உருண்டு திரண்டு வருங்கடலே - உடைந்(து)
ஓடிப் போவ தேன் கடலே
வெருண்டு மதிகெட் டாய்கடலே - பாறை
விலகிப் போகு மோகடலே

பொங்கு திரைக ளோகடலே - அவை
புரவி நிரைதா மோகடலே
எங்கும் உனதொலி யோகடலே - அன்றி
இடியின் முழக்க மோகடலே

ஓடம் எடுத்தெறி யும்கடலே - தயை
உனக்குச் சற்றிலை யோகடலே
ஆடல் வீடித னைக்கடலே - நீயும்
அழிப்ப தழகா மோகடலே

(அ)கடல் பற்றிக் கூறப்பட்டவை யாவை?

(ஆ)திரைகள் எதற்கு உவமிக்கப்பட்டன?

(இ)கடலின் அறியாமை எதுவெனக் கூறப்படுகிறது?

(ஈ)'ஆடல் வீடிதனைக கடலே - நீயும், அழிப்பதழகாமோ கடலே' இக கூற்றைக் கவிஞர் யார் கூறவதாகக் குறிப்பிட்டிருக்கலாம்?

(உ)இடம்பெறும் இணைமொழிச்சொற்கள் இரண்டு தருக?

(ஊ)பொருள் தருக.

(i)மதி (ii)புரவி (iii)தயை
(iv)கடல் (v)அழகு

*(15புள்ளிகள்)*

**04.** தகவற்தொழில்நுட்பம் என்ற பாடநெறியினைக கற்பதற்கு உமது பாடசாலையில் போதியளவு கணினிப் பயன்பாடு இல்லை. மாணவர் தொகைக்கு ஏற்றவாறு, கற்றலை இலகுவாக மேற்கொள்வதற்கு போதுமான கணினிகளைப் பெற்றுத்தருமாறு வெளிநாடுகளில் புலம்பெயர்ந்திருக்கும் உமது பாடசாலைப் பழையமாணவர் சங்கத்திற்கு, மாணவர்மன்றச் செயலாளர் என்ற வகையில், அதிபரூடாக எழுதும் 100 சொற்களில் அமைந்த கடிதமொன்று.

*(15புள்ளிகள்)*

**பகுதி - III** **நேரம்:- 2மணித்தியாலம்**

**1ம், 2ம், 3ம், 4ம் வினாக்களுக்கும் 5-7வரையிலான வினாக்களில் ஏதாவதொரு வினாவுமாக ஐந்து வினாக்களுக்கு விடைஎழுதுக.**

01. (அ)'....ஒருவனால் புனைந்த மௌலி பறிப்புண்டும் வந்திலாதான்...'
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii)யாருக்குக் கூறப்பட்டது?
(iii) இங்கு ஒருவன் எனக்குறிப்பிட்டது யாரை?
(iv)'மௌலி' என்பதன் பொருள் யாது?

(ஆ)'சரி, சரி இப்ப ஏன் விடியங்காட்டியும் ஒப்பாரி வைக்கிறேம்மா?'
(i)இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii)யாருக்குக் கூறப்பட்டது?
(iii)எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv)இக் கூற்றுடன் சம்பந்தப்பட்ட விடயம் யாது?

(இ)'......அப்பாவத்தால் அவன் அப்பிறப்பில் திட்டிவிடம் என்னும் பாம்பு கடித்து இறந்தான்; இப்பிறப்பிலும் வெட்டுண்டு வீழ்ந்தான்'
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii)யாருக்குக் கூறப்பட்டது?
(iii)இக்கூற்றில் குறிப்பிடப்படுபவன் யார்?
(iv)அவன் செய்த பாவம் யாது?

(ஈ)''....இம்மையில் எஞ்சுறா வேதனை யியைதல் கண்டுமேன் அஞ்சுதி சாவதற்று''
(i)இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii)யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv)இக்கூற்று இடம்பெறும் நூலின் முதல் நூல் யாது?

(உ)''ஒலகம் தெரிஞ்சதுநாள தாங்கா ஒனக்கு இந்தக் கேடு'
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii)யாருக்குக் கூறப்பட்டது?
(iii) இக்கூற்று இடம்பெறும் கதைத் தொகுதி யாது?
(iv)இக்கூற்றை வழு நீக்கி எழுதுக? *(20புள்ளிகள்)*

**02. பின்வரும் செய்யுள்களின் பொருளைத் தற்கால உரைநடையில் எழுதி தடித்த எழுத்துகளிலுள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக**

(அ) கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
**இணையிலா தாரை ஈண்டு அமுது செய்விப் போம** என்ன
உணர்வினால் உணர ஒண்ணா ஒருவரை உணர்தத வேண்டி
அணையமுன் சென்று நின்றங் கவர்துயில் அகற்ற லுற்றார்

(ஆ) தீமை செய்தது உணக்கும் சிறுவற்கும்
**வாய்மைதான் அது மண்ணுக்கும் விண்ணுக்கும்**
**தூய்மையே** இனி என்று துணிந்தனன்
நீ மயங்கல் அறத்தை நினை என்றான்

(இ) தண்ணளி தயங்கிய முகத்துத் **தாமரைக்**
**கண்ணிணை மல்கிய கருணை** காட்டிட
உண்ணிறை யன்புமிக் கொழுகிற் றென்னவே
வண்ணவான் மொழிச்சுவை யமிர்து வார்ந்துக

(07ஆம் பக்கம் பார்க்க...)

அரசசேவையில் உள்ள

# சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கை

அரசசேவையில் உள்ள சகல வெற்றிடங்களையும் நிரப்ப அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வெற்றிடங்களை நிரப்பாமல் அரச கருமங்களை செவ்வனே ஆற்றுவதில் பல சிரமங்கள எதிர்நோக்கப்படுவதாக அமைச்சர்கள் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஐக்கியதேசிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் இந்த வெற்றிடங்கள் உரியமுறையில் நிரப்பபபடா மையினாலேயே இந்த நிலைமை உருவாகியுள்ளது எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

இதனால் இந்த நிலையைத் தவிர்த்து சிறந்ததோர் அரசசேவையைப் பெற்றுககொடுக்கும் நோக்கில் அரசு இந்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்துள்ளது. (க-2)

# கல்விசாரா ஊழியர் வேலைநிறுத்தம் தொடர்ந்தாலும்

# கொழும்பு பல்கலை கலைப்பீட விரிவுரைகள் தொடங்கும்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப்பீட விரிவுரைகளை திட்டமிட்டபடி நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் திலக கெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம தொடர்கின்ற போதிலும் ஏனைய பீடங்களின் நடவடிக்கைகள் உரியமுறையில் இடம் பெற்றுவருவதாக உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

கலைப்பீடத்தின் இந்தத் தவணைக்காண விரிவுரைகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் இன்றையதினம் பல்கலைக்கழகத்திற்கு சமூகமளிக்க வேண்டும் எனவும அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியா களின்வேலை நிறுத்தம் இன்று 21வது நாளாக தொடர்கின்றது. இந்த வேலைநிறுத்தத்திற்கான காரணங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணர்வதற்கு தவறியுள்ளதால் இந்த வேலை நிறுத்தம் தொடர்வதாக பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த செயற்குழுவின் இணைச் செயலாளர் இப்பிரச்சினை தொடர்பாக உயர் கல்வி பிரதி அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவுடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

இப்பேச்சுவார்த்தையின் போது நியாயமான தீர்வு கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு நடைபெறவுள்ள அமைசசருடனான பேச்சுவார்த்தை பயனுள்ள ஒன்றாக அமையும் என தாம் நம்புவதாகவும் உபவேந்தர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# ஆதரவு ஆர்ப்பாட்டம்

(ஹட்டன்)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்தும், மீண்டும் ஒரு யுததம் வடகிழக்கில் ஏற்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேறறு முன்தினம் ஹட்டனில ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

ஹட்டன் பேரூந்து மையத்துக்கு முன்னால நடாத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தை மலையக இளைஞர் முன்னணி ஏற்பாடு செய்திருந்தது.

ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை பலத்த மழை பெய்த போதும் சுமார் 3500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்தும், மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதற்கு எதிராகவும் கோஷம் எழுப்பினா.

அதேவேளை, இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுவதற்கு முன்னர் வேறு பேரணியொன்றுக்கு பொலிஸ் அனுமதி வழங்கியிருந்த போதும பின்னர் மறுத்து விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மலையக மக்கள் முன்னணியின் தலைவர்களான எம்.சிவலிங்கம், அருள்சாமி மீண்டுமொரு யுத்தத்துக்கு, இந்த நாட்டை இட்டுச செல்வார்கள் என புலிகளையும் அரசையும வலியுறுத்தி உரையாற்றினார்கள். (அ-8)

# கே.சீ.சீ.சீ வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில், நேற்று முன்தினம் காலை நடைபெற்ற போட்டியில் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி 6 ஓட்டங்களால் ஸ்ரானலி விளையாட்டு கழக அணியை வென்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி 30 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 217 ஓட்டங்களை பெற்றது.

13 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது விக்கெட்டை இழந்த யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி இரண்டாவது விக்கெட்டை 137 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இழந்துள்ளது.

ரஜீவ்குமார், கலிஸ்ரன் இணைந்து 124 ஓட்டங்களை பெற்றமை மேற்கூறப்பட்ட சுற்றுப் போட்டியில் ஓர் சாதனையாக அமையலாம் எனக் கருதப்படுகின்றது.

விஜீவ்குமார் 74, கலிஸ்ரன் 43, சுரேஸ் ராஜா ஆட்டமிழக்காது 24, காந்தகுமார் 15 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுகளையும், சுஜயந்தன 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் எனப் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரானலி விளையாட்டு கழக அணியினர் 211 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தனர்.

குணதாஸ் 32, கலிதாஸ் 47, தனுஸ்யந்தன 41, ரஜீவ்குமார் 42 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், கலிஸ்ரன் 45 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மேற்படி சுற்றுப் போட்டியில் ஏ பிரிவில் 2ஆம் இடத்தை பெறும் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி பி பிரிவில் முதலாம இடததை பெறும் அணியுடன் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 2ஆவது கால் இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

தேசிய ரயில் சேவையை

# அபிவிருத்தி செய்து கொள்வதற்கு விசேட திட்டம் ஆரம்பமாகவுள்ளது

தேசிய ரயில் சேவையை அபிவிருத்தி செய்வதற்கு விசேட திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

புகையிரதக் கடவைகளில் கடமையாற்றும தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்த நியமனங்கள் வழங்க ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. அத்துடன் 100 புதிய பயணிகள் புகையிரதப் பெட்டிகளும் பெற்றுக் கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உள்நாட்டு நிறுவனம் ஒன்றுடன் இணைந்து புகையிரதப் பெட்டிகளை இந்த நாட்டிலேயே உருவாக்குவது. தொடர்பிலான திட்டத்தினை தோல்வியடையச் செய்ய திணைக்களத்தின் சில உயர் அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக ரயில்வே ஊழியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ரயில் பாதைகளை கூடிய விரைவில் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் மேறகொள்ளப்பட வேண்டும் என்று ரயில்வே ஊழியர்கள் போக்குவரத்து அமைச்சரைக் கேட்டுக்கொண்டனர். (அ-2)

# தொழில் நுட்பங்களைக் கிராமங்களுக்கு கொண்டு செல்ல வேலைத் திட்டம்

(கொழும்பு)

கிராமப் பகுதிக்கு தொழில் நுட்பத்தைக் கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் 73 விஞ்ஞான மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார்.

இந்த மத்திய நிலையங்களை பிரதேச செயலக பிரிவுகளின அப்படையில் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுவரை அமைக்கப்பட்ட விஞ்ஞான மத்திய நிலையங்களுடன் புதிதாக 7 விஞ்ஞான மத்திய நிலையங்கள் மிகவிரைவில அமைக்கப்படும் எனவும் இதற்காக 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார். (அ-7)

# மீன்பிடி உபகரணங்கள் கையளிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் ஒவ்வொன்றும் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரப் படகுகளையும, மீன்பிடி வலைகளையும் அமைச்சர் பேரியல் அஷ்ரப் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளார்.

இவ்வாறு 25 படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நீலாவணை, காரைதீவு, கல்முனை, திருக்கோவில், சாயந்தமருது, மருதமுனை, அக்கரைப்பற்று போன்ற பகுதிகளில் இவை அமைச்சரினால் விநியோகிக்கப்பட்டன. (க-2)

(0 6 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## தமிழ்மொழியும் இலக்கியமும்

(ஈ) என்று இவை இயம்பி வா வென்று
ஏவினன் என்னை எண்ணி
ஒன்று னக்கு றுவது உண்ணித்
துணிந்துரை உறுதி பார்க்கின்
துன்றிருங் குழலை விட்டுத்
தொழுது வாழ்; சுற்றத்தோடும்
பொன்றுதி யாயின் என்பின்
வாயிலிற் புறப்படு என்றான்

(உ) தேட்டமாம் பசியுள்ளவர் முன்பிலே
தின்னுஞ் சோறு கறிகளை யின்பமாய்க்
காட்டிக் காட்டிப் பறிப்பவர் போலவே
கறுத்த மேகம் வெளுத்துக் கலங்குதே
மூட்டமா யொரு மூசாப் பதாகவே
மூடி மாரி விடாது சொரிந்திட
நாட்டம் வைத்தனை வேரையுங் காத்தருள்
நந்திலா மணியே எங்கள் நாயகனே *(20 புள்ளிகள்)*

**03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை எழுதுக.**

(அ) 'கணையாழி' பாடப்பகுதியில் கண்ணுவர் எனும் பாத்திரம். சித்திரிக்கப்பட்டிருககுமாற்றை ஆதாரங்கள் காட்டி எழுதுக.

(ஆ) அரிச்சந்திர புராணத்தை ஆதாரமாகக்கொண்டு சந்திரமதி அரிச்சந்திரன பற்றிக் கூறியவற்றையும், அரிச்சந்திரன் உண்மை நிலை கண்டு வருந்தியமை பற்றியும் தொகுத்துக் காட்டுக.

(இ) இரட்சணிய யாத்திரிகத்தில் ஆத்மவிசாரி, சுவிசேஷகனிடம் தன்னைப் பற்றிக கூறியவற்றைத் தொகுத்து எழுதுக. *(14 புள்ளிகள்)*

**04. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடைதருக.**

(அ) இளையான் குடிமாற நாயனாரின் பக்தியை இறைவன் சோதித்தமை பற்றிக கூறுக.

(ஆ) மணிமேகலை செய்த அறப்பணிகளை விபரிக்குக.

(இ) பொற்கிழி கூறும் உயரிய கருத்துக்களை விளக்குக. *(16புள்ளிகள்)*

**05.** (அ) கவிதை உள்ளம் காட்டும இயற்கை பற்றி எழுதுக.

(ஆ) இன்னாநாற்பது கூறும் இன்னாதா செயல்கள் பற்றிக் கூறுக. *(10புள்ளிகள்)*

**06.** அங்கதன் சிறந்த தூதன் என்பதற்கு ஆதாரங்கள் கூறி விளக்குக. *(10புள்ளிகள்)*

**07.** திருமணிமாலை கூறும் முகம்மது சிறப்புகள் பற்றி விபரிக்குக. *(10புள்ளிகள்)*

## கல்விப் பொதுத் தராதா (சா/த) மாதிரிப் பரீட்சை

**தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி I இன் விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 01. நடு | 02. களவு | 03. மனைவி | 04. புலமை |
| 05. ஏற்றல் | 06. கடல் | 07. படிகவிழா | 08. முச்சுடர் |
| 09. குளகம் | 10. போராட்டம் | 11. கௌவை | 12. வேலைநிறுத்தம் |
| 13. மந்திரம் | 14. (1) | 15. (4) | 16. (2) |
| 17. (3) | 18. (4) | 19. (1) | 20. (2) |
| 21. கல்வி | 22. காற்று | 23. போனேன் | 24. வானதி |
| 25. பேசும்,பெற்ற | 26. விரி | 27. சுழல்காற்று | 28. ஆதலால் |
| 29. உயர்வுசிறப்பு | 30. ஓடு | 31. (2) | 32. (4) |
| 33. (3) | 34. (1) | 35. (4) | 36. பெண்ணை |
| 37. பெண்ணாக | 38. (1) | 39. (2) | 40. (1) |

க.பொ.த.சாதாரண தர மாணவர்களே!
உங்கள் வலம்புரியில் தொடர்ந்தும்
பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்.

# மரணத்தை உண்டாக்கும் வாந்தி

## மருத்துவ விளக்கம்

வாந்தியைப் பலர் எளிதாகக் கருதுகின்றனர். வாந்தியால் உடலில் நீர் குறைந்து, உயிர்விட வேண்டிய நிலைகூட ஏற்படும். குழந்தைகளில் வாந்தியால் குறிப்பிட்ட வீதத்தினர் இறக்கின்றனர்.

### நோய்மூலம்

வேகஸ் நரம்பு அல்லது அதன் முடிவுக்கிளைகளில் ஏற்படும் நேரடி அல்லது மறைமுகத் தூண்டுதலால் விளைகிறது. வாந்தியை விளைவிக்கும் மையம் மூளையின் அகணியில் வேகஸ் நரம்பின் கருவுக் கருகில் உள்ளது. வாந்திமையம் மண்டையறையின் அழுத்த மிகைப்பு, மூளைச் சீழ்க்கட்டி, மூளையில் புற்றுக்கட்டி, மூளையுறை, நச்சுக்கள், காது நரம்பு மையம் பாதிப்பு, பார்வை நரம்பு வாதம், இரத்த யூரியா மிகைப்பு, நீரிழிவில் கீட்டோன் மிகைப்பு ஆகியவற்றால் தூண்டப்பட்டும் கருத்தரித்த சில வாரங்களிலும் குடல் அமைப்பு, குடற்புண், அதிர்ச்சி, இதய இரத்தக்குழாய் உறைவு நோய் ஆகியவற்றாலும் வாந்தி ஏற்படும்.

### சிகிச்சை

நோய் மூலம் அறிந்து சிகிச்சையளிக்க வேண்டும். உடல் நீர் இழப்பைக் கணக்கிட்டு, உடலில் உப்போ, நீரோ ஏற்றவேண்டும். வாந்தி அடக்கிகள், குளோர்புரோமசின் ஊசி, மருந்து, மாத்திரை கொடுக்கலாம்.

### இரத்த வாந்தி

சிலரின் வாந்தியில் இரத்தம் வெளிப்படும். இதற்குக் காரணங்கள்.

1. உணவுக் குழாயில் ஏற்பட்டுள்ள சிரைக்குழாய்கள் தளர்ச்சியுற்று வெடித்தல், இரைப்பையிலுள்ள புண்ணின்மேல் பரப்பு சிதைந்து இரத்தம் கசிதல், இரைப்பைப்புற்று, இரத்த அணுக்கள் அழிவு நோய், இரத்த உறைவு எதிர்ப்பு மருந்துகள் கொடுப்பதால் ஏற்படலாம். மற்றும் சில அமில நச்சுக்களையும் தாவர நச்சுக்களையும், உட்கொள்வதாலும் ஏற்படலாம்.

### சிகிச்சை

1/4 கிராம் மார்பின் உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும். அதிக இரத்தம் வெளிப்பட்டிருந்தால் இரத்தம் அளிக்கப்பட வேண்டும்.

படுக்கையில் காலை உயர்த்தி வைத்து, கம்பளியால் போர்த்த வேண்டும். இரைப்பைப் புண்ணால் ஏற்பட்ட இரத்தவாந்தியானால் மூக்கின் வழியாக ஊட்டுக்குழாய் செலுத்தி அதன் வழியாக சிற்ரேற் கலந்த பாலை இரப்பைக்குள் செலுத்த வேண்டும். 48மணிக்குள் இரத்தவாந்தி நிற்கவில்லையானால், வயிற்றை வெட்டிப் பார்த்து சிகிச்சையளிக்க வேண்டும்.

### வாந்திபேதி

வாந்திபேதி என்றழைக்கப்படும் நோய்கொலரா என்ற நுண்ணுயிரால் விளைவது. இந்த நுண்ணுயிரி, நீர், உணவு, நைப்புள்ள காய்கள், பழம், மற்றும் மனித மலம் கலந்த நீர் காய்ந்த கீரை காய்களிலும் ஒட்டிப்பரவும். இந்நுண்ணுயிர் வாந்திபேதியில் உட்காரும் ஈக்களின் கால்களில் ஒட்டி, பல இடங்களுக்கும் பரப்பப்படுகின்றன. வாந்தி பேதி நோயால் ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கானோர் இறக்கின்றனர்.

### நோய்மூலம்

இது ஒரு நுண்ணுயிர் நோய். இந்நோய் விப்ரியோ கொலரா என்ற நுண்ணுயிரால் விளைவது. விப்ரியோ கொலரா ஆங்கில எழுத்து சி போன்று உரு உடையது.

விப்ரியோகொலரா தவிர, கொலரா நுண்ணுயிர்கள் வகையைச் சேர்ந்து ஓகாவா, இனாபா, ஹைகோஜிமா, எல்டார் ஆகியவையும் வாந்திபேதியை விளைவிக்கின்றன.

வாந்திபேதி நுண்ணுயிரியின் நோய் அடைவு காலம் சிலமணி முதல் ஐந்துநாள் வரையிலாகும். இந்நோய் கோடை மற்றும் வெப்பக் காலங்களில் பெய்யும் மழைக்குப்பின், கொள்ளை நோயாகப் பரவும். இயல்பாக இந்த நுண்ணுயிர் ஆறுகளின் கரையோரங்களிலும், கடலின் கரையோரங்களிலும் காணப்படும். நைப்பற்ற நிலையில் சில மணிகள் கூட வாழாது.

### பரவுதல்

நீ, உணவு, நைப்புள்ளகாய், பழம், ஈக்கள், வண்டுகள் வழியா கப் பரவும். உணவு நீரோடு செரிமானப்பாதையை அடைந்து குடல் சுவரில் புகுந்துவாழும். இரத்த ஓட்டத்தில் புகாது.

### நோய்க்கூறு

வாந்திபேதி நுண்ணுயிர், குடலில் புரதத்தாலான ஒரு நச்சை வெளிப்படுத்தும். இதனால் வாந்திபேதி விளைகிறது. குடலில் நீர் சுரப்பதை அதிகரிக்கிறது. வாந்திபேதியில் இந்த நீர் வெளியேற்றப்படுவதால் உடல் நீர் வெளியேற்றப்படுவதால் உடல் நீர் குறைந்து, வறட்சி, நீர்வேட்கை, தசைகளில் சுருக்கம் ஏற்படும்.

### அறிகுறி

வாய், மலவாய் வழியாக வாந்தியும், பேதியும் தொடர்ந்து ஏற்படும். பேதி பீறிட்டு அடிக்கடி நீர் போல் ஊற்றும், வாந்தி, வேகமாக அடிவயிற்றிலிருந்து கிளம்பும். உடல் வெப்பம் 37°C க்குக் குறையும். மலத்தோடு சீதம், உப்பு, பொட்டாசியம், பைகார்பனேட் மற்றும் நீர் காணப்படும். சில மணிகளில் பல முறை வாந்தியும், பேதியும் எற்படும். இரண்டும் சேர்ந்துகூட இருண்ட பார்வை, நாவறட்சி, மயக்கநிலை, அமைதியின்மை, நீலவாதை, இரத்தக்குறையழுத்தம், மிதக்காய்ச்சல், வியர்வை மிகைப்பு, சிறுநீரின்மை, அதிர்ச்சிக்குப்பின் மீளாத் துயில் ஏற்பட்டு இறப்பார்.

மலச் சோதனையில் விப்ரியோ கொலரா நுண்ணுயிரைக் காணலாம்.

### சிகிச்சை

விரைவாக உடல் நீரை சீசெய்ய சிரை வழியாகச் சர்க்கரை, உப்பு நீர், ஏற்றுதல். இதற்கு வாய்ப்பில்லையெனில் இளநீர் அல்லது உப்பிட்டமோர், எலுமிச்சைச்சாறு கொடுக்கவும் விரைந்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவும். டெட்ராசைக்ளின் 500 மி.கி.சிரைவழி அல்லது ஜெண்டாமைசின் 80மி.கி.தசைவழி 12 மணிக்கொருமுறை ஏற்றவும்.

டாக்டர் சாமி சண்முகம்

---

## இராமகிருஷ்ண மிஷன் மாணவர்களுக்கு உதவி

வெள்ளவத்தையில் அமைந்துள்ள கொழும்பு இராமகிருஷ்ண மிஷன், கடந்தவருடம் சுனாமியின் தாக்கத்திற்கு உட்பட்ட வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிற்கு இலவசமாக சைக்கிள்களை வழங்கியுள்ளது.

யாழ்அரசாங்க அதிபர் கேகணேஷ் தலைமையில் கடந்த சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கொழும்பு இராமக்கிருஷ்ண மிஷன் தலைவர், ஸ்ரீமத்சுவாமி ஆத்ம கணானந்தஜி மகராஜ் கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கியுள்ளார்.

இதன்மூலம் இப்பகுதியில் பல ஏழை மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-252)

## அபிவிருத்தி வேலைகள் அடுத்தமாதம் ஆரம்பம்

சுனாமி அனர்த்தம் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகள் அடுத்தமாதம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மக்களின் உதவியுடன் தேர்தல் தொகுதிதோறும் கிராமப் புறங்களின் அபிவிருத்திக்கு அரசாங்கம் இந்தத் திட்டங்களை அமுல்படுத்தும். 400 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட நீர்விநியோகத் திட்டத்தை மக்களிடம்கையளிப்பதற்கான வைபவம் துருவில என்ற இடத்தில் இடம்பெற்ற போது ஜனாதிபதி உரையாற்றினார். (அ2)

## உள்ளூர் மெய்வல்லுநர்களின் திறமையை விருத்திசெய்யத்திட்டம்

(கொழும்பு)

உள்ளூர் மெய்வல்லுநர்களின் திறமையை அபிவிருத்தி செய்யவென இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

சம்மேளனத்தின் தலைவரும் அமைச்சருமான ஜனக பண்டார தென்னக்கோன் தகவல் தருகையில்,

தேசிய விளையாட்டு அணியில் விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் சேர்த்துக்கொள்வதற்கென முதலில் குழுக்களை நியமிக்கவிருக்கின்றோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்களும் வீராங்கனைகளும் இலங்கையில் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் தெற்காசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றவிருக்கின்றனர்.

பயிற்சியளிப்போருக்கான வசதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றார். (க-2)

## சுனாமி நிதி தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் பிரதமரின் கூற்றை பல அமைச்சர்கள் நிராகரிப்பு?

சுனாமி நிவாரண நிதியில் இடம்பெற்ற முறைகேடுகள் பற்றிய விவகாரத்தில் பிரதமரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் ரூ. 82மில்லியன் சுனாமி நிதி இடப்பட்டதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது என்ற பிரதமரின் கருத்தை அமைச்சர்கள் பலர் நிராகரித்துள்ளனர்.

மேற்படி நிதி **Standard Chartered** வங்கியில் தனிப்பட்ட வங்கிக்கணக்கில் இடப்பட்டிருந்ததாக சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை அடுத்து பிரதமர் கடந்த பெப்ரவரி 2ல் தன்னால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பின்படியே இதற்கான அங்கீகாரம் பெறப்பட்டது எனக் கூறினார்.

பெப்ரவரி 10அன்று அமைச்சரவையின் நிகழ்ச்சிநிரலின்படி பிரதமர் ஏற்கனவே சமர்ப்பித்த அமைச்சரவை அங்கீகாரத்திற்கான பத்திரத்தின்படி, உள்நாட்டு வெளிநாட்டு சுனாமி நிதி அனைத்தையும் மத்தியவங்கியில் தனியான கணக்கில் இடுவதென்று தீர்மானிக்னப்பட்டதாக அறியப்படுகிறது.

இதைவிட வேறு எந்தத் தனியான கணக்குகளும் ஆரம்பிப்பதில்லை. டிசம்பர்29ஆம் திகதி 2004 அன்றே ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இது தொடர்பிலான பிரதமரின் கோரிக்கையை அமைச்சரவை நிராகரிப்பதாகக்கூறி பிரதமரின் செயலாளருக்கு எழுத்து மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததாகவும் இதன் பிரதி ஒன்று ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் "பிரதமரின் புனர்ஜீவன நிதி" என்ற பெயரில் டிசம்பர் 31ஆம் திகதி 2004ல் ஒரு கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அதில் 73மில்லியன் ரூபா (மக்கள் வங்கியில்) இடப்பட்டிருக்கிறது என்று பிரதமர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. பின்னர் "அம்பாந்தோட்டைக்கு உதவுதல்" என்ற பெயரில் ராஜகிரிய **Standard Chartered Bank**ல் தனியான கணக்கு ஆரம்பிக்கப்பட்டு ரூ.82,958,247.70/= பிரதமரால் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இது ஜனவரியில் இடம்பெற்றுள்ளது. (அ-6)

## ஆத்ம உணர்வோடு போராடும் இளைஞர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் — மலையக மக்கள் முன்னணி

(கொழும்பு)

பொதுமக்களின் போராட்டங்களில் தனிமனித புகழுக்கும், பிரபல்யத்திற்கும், வசப்படுத்தும் தலைமைக்கும் மத்தியில் ஆத்ம உணர்வோடு போராடும் இளைஞர் சக்திகளுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என நேற்று முன்தினம் இடம்பெற்ற ஹட்டன் இளைஞர் பேரணியிலே மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் எம்.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசும் கைச்சாத்திட்ட பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கை சமாதானத்திற்கு வழிசமைக்கவேண்டும். கட்சி அரசியல் இனபேதங்களுக்கு அப்பால் மனிதநேயத்தோடு ஒன்று திரண்டு நாட்டு மக்களின் ஐக்கியத்திற்கும் சமாதான வாழ்விற்கும் விடிவுகிடைக்கப் பாடுபட வேண்டும்.

இளைஞர் பேரணி ஒன்று திரண்டு நடத்தும் இப் போராட்டத்தின் இலட்சியம் வெற்றிபெற வேண்டும்.

இயற்கை அனர்த்தத்தாலும் இனவெறி அழிப்பினாலும் நிர்க்கதியாகத் தவிக்கும் மக்களுக்கு இயல்பு வாழ்வை அமைத்துக்கொடுக்காமல் நாடாளுமன்றத்தில் வாதப் பிரதிவாதங்கள் நடத்திக்கொண்டிருக்கும் தேசிய கட்சிகள் தேர்தலை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றார்கள்.

இனவெறி அமைப்புக்கள் நாட்டைச் சீரழித்துக்கொண்டிருக்கின்றன.

பௌத்த தர்மமும், சித்தாந்தங்களும் பௌத்த பிக்குகளினால் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது எனவும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் தெரிவத்துள்ளார். (அ-9)

## லண்டன் குண்டுத் தாக்குதலில் பலியானவர் சங்கரியின் மருமகள்

(கொழும்பு)

கடந்தவாரம் லண்டனில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பலியாகிய இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட சஜ்னுயா பரதசங்கரி என்னும் யுவதி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி யின் மருமகள் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இவரின் வீட்டிற்கு இலங்கையின் உயர்ஸ்தானிகர் ஷேனுகா செனவிரட்ணவும் பிரதி உயர்ஸ்தானிகரும் விஜயம் செய்து அரைமணி நேரம் பெற்றோருக்கு ஆறுதல் கூறிச்சென்றுள்ளனர்.

சஜ்னுஜாவின் உடல் பல நாட்களின் பின்மீட்கப்பட்டது. இதே வேளை, பிரவீன் விஜயேந்திரன் என்பவரும் மேற்படி குண்டு வெடிப்பில் காயமடைந்துள்ளார். இவரும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இவரைப் பார்க்கச் சென்ற இலங்கை உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் உத்தியோகபூர்வமான அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும். ஏனெனில் தற்போது அவர் ஒரு பிரிட்டிஷ் பிரஜை என பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-6)

## கொரியாவின் வதிவிடப்பிரதிநிதி தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

கொரிய நாட்டு இலங்கைக்கான புதிய வதிவிடப் பிரதிநிதி யங்ரேகன் இன்று மாலை யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை தரவுள்ளார். இவருடன் கொரிய நாட்டைச் சேர்ந்த பொறியியலாளர் குழுவினரும் வருகை தரவுள்ளனர்.

கொரிய நாட்டு அரசின் உதவியுடன் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்களை உடனடியாகத் தொடங்குவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே கொரியநாட்டு பொறியியலாளர் குழு வருகை தரவுள்ளது.

அரச திணைக்களங்களது கட்டடங்கள் யாவும் கட்டடத் திணைக்களத்தின் ஊடாகவே கட்டப்பட்டு வருகின்ற வேளையிலும் இத்திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் தாமதமடையும் என்பதால் கொரிய அரசாங்கம் தமது பொறியியலாளர்களை பயன்படுத்தி நவீன தொழில்நுட்ப முறைகளைப் பிரயோகிக்க கட்டடங்களை விரைவாகக் கட்டிமுடிக்கவுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் வருகைதரும் கொரியநாட்டு இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி யங்ரேகன் நாளை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபர் என்.யோகராஜன் ஏற்பாடுகளைச் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-19)

# ஆர்.எஸ்.எஸ் நெருக்குதல் முற்றுகிறது; பதவியிலிருந்து விலகுவார் அத்வானி

(புதுடில்லி)

ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக் சங்கத்தின் (ஆர்.எஸ்.எஸ்) நிர்ப்பந்தம் அதிகரிக்கத் தொடங்கியதை அடுத்து, பாரதீய ஜனதாக கட்சித் தலைவர் பதவி, மக்களவை எதிர்க கட்சித் தலைவர் பதவி ஆகய இரண்டில் ஏதாவது ஒரு பதவியை எல்.கே.அத்வானி இராஜிநாமா செய்வார் என எதிர்பார்க்கப படுகிறது.

இரு பதவிகளிலும் அத்வானி தொடர் வதையே விரும்புகிறேன் என்று பாஜக மூத்த தலைவரும் முன்னாள் பிரதமருமான வாஜ்பேய் கூறியபோதிலும், எந்தப் பதவி யில் நீடிப்பது என்பதை அத்வானிதான் முடிவு செய்ய வேண்டும இரு பதவிகளை வகிப்பதை அவரே கூட விரும்பமாட்டாா என்றும் கூறியிருக்கிறார். எனவே இரண்டில் ஒரு பதவியை அத்வானி இராஜிநாமா செய் வார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

அண்மையில் பாகிஸ்தானுக்குச் சென்றி ருந்தபோது பாகிஸ்தான் நிறுவனரான முகம் மது அலி ஜின்னா மதச்சார்பற்றவர் எனறும் பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாள், என் வாழ்க் கையில் மிக வருத்தமான நாள் என்றும் அத்வானி கூறியதை அடுத்து, அவருக்கு கட்சியிலும், ஆர்.எஸ்.எஸ்ஸிலும் எதிர்ப்பு எழுந்தது.

திடீரென ஒருவருக்கு ஒரு பதவி என்னும் கோஷத்தை எழுப்பிய ஆர்.எஸ்.எஸ்.கட்சித தலைவர் பதவியிலிருந்து அத்வானி விலக வேண்டும் என்னும் நிர்ப்பந்தத்தையும் அதி கரிக்கத் தொடங்கிவிட்டது.

அதவானி பதவி விலக வேண்டும என்று ஆர்.எஸ்.எஸ் நிர்பந்திக்கவில்லை என்று சுஷ்மா, ஸ்வராஜ் போன்ற தலைவர்கள் கூறிவந்தனர்.

ஆனால், அதை மறுக்கும் வகையில் அத்வானி விலக வேண்டும என்னும் ஆர்.எஸ். எஸ்ஸின் விருப்பம் பாஜக தலைவர்களி டம் தெரிவிக்கப்பட்டுவிட்டது என்று பகி ரங்கமாக, ஒரு கட்டுரையில் கூறிவிட்டார். ஆர்.எஸ்.எஸ் முக்கியஸ்தரனா எம்.ஜி வைத்யா,

கட்சியின் மூத்த தலைவரான மதன் லால் குரானாவும் கட்சித தலைவர் பதவி யிலிருந்து அத்வானி விலக வேண்டும் என்று கூறியிருக்கிறார். ஆனால் ஆர்.எஸ.எஸ்.ஸின் நிர்பந்தத்துக்குப் பணிந்து, கட்சித் தலை வர் பதவியிலிருந்து விலகுவதில்லை என் பதில் உறுதியாக இருக்கிறார் அத்வானி.

எனவே, இரு தரப்புக்கும் இடையே சமரசம் செய்யும் முயற்சியில், மூத்த தலை வர்களான வெங்கைய நாயுடு, ஜஸ்வந்த் சிங், சஞ்சய் ஜோஷி ஆகியோர் தீவிரமாக இறங்கினர்.

ஆர்.எஸ்.எஸ்.தலைவர்களை அவர்கள் சந்தித்துப் பேசினர். இதற்கிடையே நேறறு முன்தினம் மாலை 6 மணிக்கு நடக்கவி ருந்த கட்சியின் பொதுச் செயலர்கள் கூட் டத்தை ஒரு மணி நேரம் ஒத்திவைத்துவிடடு, ஆர்.எஸ்.எஸ் தலைமையகத்துக்குச சென றார் அத்வானி.

அதன் பொதுச் செயலர் மோகன் பகவத், இணைப் பொதுச் செயலர் சுரேஷ் சோனி ஆகியோரைச் சந்தித்து, தற்போதைய நெருக கடி குறித்து விவாதித்தார். இந்நிலையில் குவாலியரில் நிருபர்களிடழ அவர் பேசிய வாஜ ஒருவருக்கு ஒரு பதவி என்பதுதான் கட்சியின் கொள்கை எனவே அக் கொள்கை விரைவில் கட்சியில் நடை முறைப்படுத்தப படும் என்று கூறினார். (க)

# சதாம் உசேன் மீது கொலை வழக்கு

(பக்தாத்)

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன 1982 ஆம ஆண்டு பக்தாத் நகரில வடக்குப் பகுதியில் உள்ள ஷிடே கிராமத்தில படு கொலைகள் செய்ததாக அவர் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டது.

இந்த வழக்கின் பூாவாஙக நடவடிக்கை களமுடிந்து நீதிமன்றில் விசாரணை தொடங்க இருக்கின்றது. ஆனால், வழக்கு விசாரணை எந்தத் திகதியல் தொடங்கும் என்பதை கிரிமி னல நீதிமன்றமே 45 நாட்களுக்குள் அறி விக்கும் என்று ஈராக் விசேஷ நீதிமன்ற தலைமை நீதபதி ரெய்ட் ஜுஹி கூறினாா.

சதாம் உசேனின் ஆட்சியில் உளவுர் படை தலைவராக இருந்த பதராசன் இப்ரா கிம், முன்னாள் துணை ஜனாதிபதி தாஹா யச் சின ரமதா மற்றும் அவாட்ஹமீது ஆகி யோர் மீதும் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இவர்கள் மீதுள்ள குற்றம் நிருபிக்கப பட்டால், அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். (க)

# அரசியலில் களமிறங்க விஜயகாந்த் தயார்!

(சென்னை)

எதிர்வரும் செபடம் பரில் புதிய அரசியல கட்சி தொடங்க முடிவு செய்துள்ள நடிகர் விஜய காந்த் ,அதற்கான முஸ் தீபுகளில் தீவிரமாக இறங் கியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற கடலூர், விழுப்புரம், பாண்டிச்சேரி ஆகிய பகுதிகளின் ரசி கர் மன்ற நிர்வாகிகள் கூட்டத்தில் புதிய கட்சி தொடங்குவது மற்றும் செப்டம்பர் 14ஆம் திகதி மதுரையில் நடைபெற வுள்ள அரசியல் மாநாட்டு ஏற்பாடுகள் குறித்து அவர் ஆலோசனை நடத்தினார்.



கோயம்பேடு ஆண்டாள் அழகர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற கடலூர், விழுப்புரம மாவட்டங்கள் மற்றும் புதுவை விஜயகாந்த் ரசிகர் மன்ற நிர்வாகிகளின் அரசியல் மாநாட்டு ஆலோசனைக் கூட்டத்தில் விஜயகாந்த பேசிய போது எடுத்த படம். (க)

# ஸ்பெயினில் பரவிய காட்டுத் தீயை அணைக்க சென்றவர்களில் 14 பேர் பலி

(இலண்டன்)

ஸ்பெயின் மத்திய பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை அணைப்பதற்கெனச் சென்ற தீயணைக்கும் படையினரில் 14பேர் உயி ரிழந்துள்ளனர்.

இதற்கு மேலதிகமாக காட்டுத் தீயிற்குள் அகப்பட்ட 14 பொதுமக்களும் இறந்துள் ளனர். தீயணைக்கும் படையினரால் உப யோகிக்கப்பட்ட 2வாகனங்களும் முற்றா கச் சேதமடைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட காட்டுத்தீ யின் வெப்பத்திலிருந்து மக்களைக் காப் பாற்றவென நிவாரணப் படையினர் ஆயிரக கணக்கானோரை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை, இந்தக் காட்டுத்தீ பரவக காரணமாக இருந்தவர் என்ற சந்தேகத் தின் பேரில் பொலிஸார் ஒருவரை கைது செய் துள்ளனர். (க-2)

# அசாம், உத்தரப் பிரதேசத்தில் வெள்ளம் 12 பேர் பலி, ஒரு லட்சம் பேருக்கு பாதிப்பு

(புதுடில்லி)

அசாம் மாநிலத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பிரம்மபுத்ரா ஆற்றி லும், அதன கிளை நதிகளிலும் அபாய அள வையும் தாண்டி வெள்ளம் கரைபுரண்டு ஓடு கிறது.

அத்துடன் தெமாஜி மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலை யில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு இருப்பதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டு இருக்கிறது.

இங்குள்ள காளிரங்கா தேசிய வன விலங்கு சரணாலயத்துக்குள் பிரம்மபுத்ரா வெள்ளம் பாய்ந்துள்ளது. எனவே அங்குள்ள காண்டாமிருகங்கள் மற்றும் மிருகங்கள பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய கடும் மழையினால் அசாம் மாநிலத்தில் 12 பேர் இறந்துவிட்டனர். மேலும் ஒரு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, உத்தரப்பிரதேச மாநில மும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது. கங்கை, யமுனா உட்பட பல ஆறுகள் அபாய அளவை எட்டியுள்ளன.

லக்னோ, பைசாபாத், வாரணாசி,



கோரத்க்பூர் ஆகிய நகர் பகுதிகளிலும் பலத்த மழை பெய்துள்ளது. இன்னும் 48 மணி நேரத்துக்கு மழை நீடிக்கும் என்று வானிலை இலாகா அறிவித்துள்ளது. (க)

# அணு ஆயுத விவகாரத்துக்கு தீர்வு! பேச்சுவார்த்தை 26 இல் ஆரம்பம்

வடகொரியா அணு ஆயுத விவகாரத் திற்குத் தீர்வு காணும் வகையிலான பேச் சுக்கள் பீஜிங்கில் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கின்றன.

இருந்த போதிலும் இது குறித்த கலந் துரையாடல் முடிவடைவதற்கான திகதி எது வும் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இதற்கிடையில் இந்தப் பேச்சுவார்த்தை களின் போது குறிப்பிடத்தக்க முன்னேற் றம ஏறபடாவிட்டால் அதனை இடைநிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜப்பானுக்கும் தென்கொரியாவுக்கும் அமெரிக்கப் பிரதிநிதி அறிவித்துள்ளதாக ஜப்பானிய பத்திரிகைச் செய்தி வெளியிட் டுள்ளது.

இதற்கு முன்னராக வடகொரியா விடுத்த அறிவித்தலில் சீனா, ஜப்பான், ரஷ்யா, தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகள பங்கு பற்றும் பேச்சுக்களில் தம்மால சமுக மளிக்க முடியுமென்று அறிவித்திருந்தது.

பேச்சுக்கள் நடாத்தும் நாடான சீனா விடுத்த வேண்டுகோளில் 5 நாடுகளினதும் பிரதிநிதிகளை 26 ஆம் திகதி செவ்வாயக் கிழமை காலை பீஜிங்கில் சமுகமளித்திருக் கும்படி கேட்டுள்ளது.

சீன அதிகாரி ஒருவர் தகவல் தருகையில இந்தப் பேச்சுக்களின் போது குறிப்பிடத் தக்க பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதே 6 நாடுகளினதும் நோக்கமாக இருப்பதனால் கலந்துரையாடல் முடிவடைவதற்கான திகதி அதுவும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (க-7)

# ஐதராபாத்தில் கடும் மழை; வெள்ளத்தில் சிக்கி மூவர் பலி

(இலண்டன்)

ஐதராபாத்தில் பெய்த பலத்த மழை காரணமாக வெள்ளத்தில் சிக்கி மூன்று பேர் பலியானார்கள்.

அங்கு கடந்த சனிக்கிழமை பயங்கர மழை பெய்தது. இதனால் அங்குள்ள பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

கரமநகர், மேடக், வாரங்கல், நல கோண்டா, கிருஷ்ணா, ரங்கா ரெட்டி மற்றும் அடிலாபாத் ஆகிய மாவட்டங்களிலும் பல த்த மழை காரணமாக வெள்ளம் ஏற்பட் டுள்ளது.

கடுமையான வறட்சி பகுதியான அனந்த பூரிலும் தற்பொழுது கனத்த மழை பெய்து வருவதாக தகவல்கள் தெரிவிக் கின்றன. (க)

# ஆப்கானிஸ்தான் எல்லை அருகே 17 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

ஆப்கானிஸ்தான் எல்லை அருகே அன் னிய நாட்டு தீவிரவாதிகள் 17 பேரை பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

இதனை பாகிஸ்தான் நாட்டு தனியாா ரி.வி.நேற்றுமுன்தினம் ஒளிபரப்பியது.

ஆப்கானிஸ்தான் எல்லை அருகே பழங் குடியினர் வசிக்கும் பகுதியில் அன்னிய நாட்டு தீவிரவாதிகள் 17 பேர் பாகிஸ்தான் பாதுகாப்புப் பிடையினரால் சுட்டுக் கொல் லப்பட்டனர்.

இந்தத் தேடுதல் வேட்டையில் பாகிஸ் தான் இராணுவ வீரர் ஒருவரும் பலியானார்.

இந்தச் சண்டை வடக்கு வசீாிஸதான் பகுதியல் நடைபெற்றதாக இராணுவ தக வல தொடர்பாளர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் விபரங்களைப பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என் றும கொல்லப்பட்டவர்கள் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றித் தகவல் தெரிய வரவில்லை என்றும் அந்த ரி.வி செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (க)

**லண்டன் குண்டு வெடிப்பில் ஈடுபட்ட தீவிரவாதிகள் ஹாசிப் ஹுசைன், ஜெர்மன் லின்சை, முகமது சித்திக்கான், ஜெகாத் தன்வீர் ஆகியோர் ரயில்வே ஸ்டேஷனுக்குள் குண்டு வைக்கச் செல்லும போது லூாட்டன் ரயில் நிலைய சி.சி.டி.டிவியில் பதவாகி இருந்த எடுக்கப்பட்ட வீடியோ பதிவை பொலிஸார் வெளியிட் டுள்ளனர்.**



# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை 7 சதாம் கதை

பி.ஜே.ராஜய்யா

## அரபு தேசம் சிதறியது!


நான்கு வயதில் மன்னரான இரண்டாம் ஃபைசல்

கைருல்லா மாமா தொடர்ந்தார். "பெட்ரோலுக்கு மவுசு ஏறுனது தான் தாமதம் வளைகுடாவை ஒட்டியிருக்கிற நம்ம அரபு மண் ணுக்கு வந்துச்சு ஆபத்து"

சதாம் திடுக்கிட்டான். "ஆபத்தா? எப்பிடி மாமா?"சொல்றேன்...! பெட்ரோல் தேவைப்படுற நாடுகளும், பெட்ரோலை வச்சு லாபகரமா பிசினஸ் பண்ணலாம்னு கணக்குப் போட்ட பணக்கார நாடுகளும் பெட்ரோல் சத்து அதிகம் இருக்கிற நம்ம அரபு மண்ணைப் பிடிக்க வேட்டை நாய் மாதிரி நான் முந்தி, நீ முந்தின்னு போட்டி போட்டன. அந்தச் சமயத்துல அரபு பிரதேசத்தை அட்டோமான் ராஜா ஆட்சி செஞ்சுக்கிட்டிருந்தார்.

"அட்டோமான் ராஜாவும் அரேபியரா மாமா?"


மன்னர் முதலாம் ஃபைசல்

"ஆமா, ஆனா அவர் ஈராக்கியர் இல்ல, துருக்கியர். அவரோட தலைநகர் இஸ்தான்புல். இந்த நகரத்தோட பழைய பெயர் கான்ஸ் டாண்டிநோபிள். அட்டோமான் சாம்ராஜ்ஜியம் ரொம்பப் பெரிசு. அது கிழக்கே சவுதி அரேபியாவோட ஒரு பகுதியிலிருந்து மேற்கே துருக்கி வரை பரவியிருந்துச்சு. ஈராக், ஜோர்டான், சிரியா, லெப னான், குவைத் எல்லாம் அதுக்குள் அடக்கம். 1914இல் முதல் உலகப் போர் வெடிச்சது. உடனே இங்கிலாந்தும், பிரான்சும் கூட்டாகப் படையெடுத்து வந்து அடோமான் ராஜாவை விரட்டி யடிச்சிட்டு மொத்தப் பிரதேசத்தையும் பிடிச்சுக்கிருச்சு".

இதைக் கேட்ட சதாமின் மனசுக்குள் சோகம் பரவியது. வளைகுடாக் கடலில் அட்டோமான் ராஜாவின் போர்க்கப்பல்களை இங்கிலாந்து போர்க்கப்பல்கள் மோதிக் கவிழ்க்கும் துயரக்காட்சி உள்ளுக்குள் விரிந்தது. மாமா தொடர்ந்தார்....


மன்னர் காஸி

"இங்கிலாந்தும், பிரான்சும் நம்மை அடிமைப்படுத்தினது பத்தாதுன்னு ஒரே தேசமாய் இருந்த அரபு பிரதேசத்தை 'இதுலருந்து அதுவரைக்கும் உனக்கு. அதுலிருந்து இதுவரைக்கும் எனக்கு'ன்னு துண்டு துண்டாப் பிரிச்சு பங்கு போட்டுக்கிருச்சு. அரேபியரெல்லாம் ஓரினம். அவங்க எல்லாரும் ஒரே தேசம்"னு நெனச்சிக்கிட்டிருந்த நம்ம பெரியவங்களுக்கு இப்படி மண்ணையும் மக்களையும் அடிமைப்படுத்தி, சிதறடிச்சதை சகிச்சுக்க முடியல. 'எங்க மண்ணைவிட்டு வெளியே போங்கடா ஐரோப்பிய நாய் களே'ன்னு அவங்க ஆவேசமா போராட ஆரம்பிச்சாங்க".

சதாமின் நரம்பெல்லாம் முறுக்கேறியது. நிமிர்ந்து உட்கார்ந்தான். "கூறுபோட்ட பிரகாரம், ஈராக்கை இங்கிலாந்து எடுத்துக்கிட்டு, அதை தன்னோட நேரடி ஆட்சியின் கீழ் 1920-ல் கொண்டு வந்துச்சு. இதுக்கான அறிவிப்பு வெளியானவுடனே ஈராக்கியர்கள் வெள்ளக்காரர்களை எதிர்த்துக் கடுமையான போராட்டம் தொடங்கினாங்க. இங்கேயிருந்த இங்கிலாந்து இராணுவத்தால் அதை சமாளிக்க முடியல. அதனால் இந்தியாவுலிருந்து இராணுவத்தைக் கொண்டுவந்து குவிச்சாங்க"

'ஏன் மாமா?'

"அப்ப இந்தியாவையும் இங்கிலாந்து அடிமையா வச்சிருந்துச்சு. அங்கே சுதந்திரப் போராட்டம் நடத்துற இந்தியர்களை சுட்டுப் பொசுக்குறதுக்காக பெரிய பட்டாளத்தை இங்கிலாந்து தயார் பண்ணி வச்சிருந்துச்சு. ஈவு இரக்கம் இல்லாம கண்மூடித்தனமா கொன்னு குவிக்க அதுக்கு பயிற்சி குடுத்துருச்சு. முந்தின வருஷம் தான் ஜாலியன் வாலா பாக்ல, கூட்டம் போட்டு பேசிக்கிட்டிருந்த அப்பாவி இந்தியர்களை காட்டுமிரர்ண்டித்தனமா கொன்னு பேர் வாங்கியிருந்துச்சு. அதனாலதான் அங்கேயிருந்து இராணுவத்தைக் கொண்டுவந்து எறக்கினாங்க.

'அது போதாதுன்னு போர் விமானங்கள் மூலம் விஷவாயு குண்டுகளை வீசி நம்ம போராளிகளை ஆயிரக்கணக்கில் கொன்னாங்க. இந்த பேரழிவு ஆயுதத்தை நமக்கு எதிராகப் பயன்படுத்துச் சொன்னவன் யார் தெரியுமா? இங்கிலாந்து அரசியல் தலைவன் வின்ஸ்டன் சர்ச்சில். அந்தக் கொலகார பாவிக்கு 'பெரிய பேச்சாளன்' னு உலகம் பூரா பேர்.

இப்படி மனசாட்சியே இல்லாம பேரழிவு ஆயுதங்களை நமக்கு எதிரா பயன்படுத்திய இங்கிலாந்து, நாளைக்கு பேரழிவு ஆயுதங்களை உலகத்திலிருந்து அப்புறப்படுத்துறதுக் காகவே பிறப்பெடுத்த மாதிரி நாடகம் ஆடினாலும் ஆடலாம். யாருக்கு தெரியும்?

"இத்துணைக்குப் பிறகும் நம்ம மக்கள் சக்திக்கு முன்னால இங்கிலாந்து அரசு தாக்குப்பிடிக்க முடியல. அதனால ஈராக்குக்கு சுதந்திரம் கொடுக்கிறதா ஒத்துக்கிட்டாங்க. நீ பெறக்குறதுக்கு அஞ்சு வருஷத்துக்கு முன் ஈராக் சுதந்திரம் அடைஞ்சது."

"வேதனை என்னன்னா வெள்ளக்காரங்க சுதந்திரம் கொடுக்கிறதா பேர் பண்ணி நயவஞ்சகமா, தங்களுக்கு வேண்டப்பட்ட முதலாம் ஃபைசல் என்பவரிடம் ஆட்சியை ஒப்படைச்சாங்க. அந்த ஆள் ஈராக்காரர் இல்ல. மெக்கா ராஜவம்சத்தைச் சேர்ந்தவர். இங்கிலாந்து தயவுல ஏதாவதொரு நாட்டை ஆள வாய்ப்பு கிடைக்காதான்னு 'ஆட்சி பிச்சை' கேட்டுக்கிட்டிருந்தவர். அவரோட 'நட்புறவு ஒப்பந்தம்'ங்ற பேர்ல வெள்ளக் காரங்களுக்குச் சாதகமான-நமக்குப் பாதகமான-ஒரு ஒப்பந்தத்தை போட்டுக் கிட்டு அவரை நமக்கு ராஜா ஆக்கினாங்க.

"முதலாம் ஃபைசல் ராஜாவுக்கு பிறகு அவரது மகன் காஸி ராஜாவானார். அவருக்கு பிறகு அவரோட மகன் இரண்டாம் ஃபைசல் நாலு வயசுல ராஜா ஆனான்"

"நாலு வயசுலயா மாமா?" என்று திகைப்புடன் கேட்டான் சதாம்.

"ஆமா! சிம்மாசனத்துல சும்மா உட்கார்ந்திருக்கிற பொம்மைக்கு எத்தன வயசானா என்ன? இப்ப நமக்கு ராஜா அவன்தான். ஆனா பேருக்குத் தான். உண்மையில ஆட்சி வெள்ளக்காரங்க கையில. இப்பவும் அவங்கதான் நேரடியா நம்மள கொள்ளையடிக்கி றாங்க. மறைமுகமா அடிமையா வச்சிருக்காங்க. அவங்களுக்கு என்னிக்கும் மன்னிப்பு இல்ல. வெள்ளக்காரனையும், அவன் ஏஜண்டுகளையும் பழிவாங்கணும். விரட்டியடிக் கணும். அத்தோட அவங்க பிரிச்சு வச்சிருக்கிற அரபு மண்ணையும் மக்களையும் ஒரே தேசமா திரும்பச் சேக்கணும். இதைச் செய்யாதவன் அரேபியன் இல்ல. இதைத் தடுக்கிறவன் அரேபியன் இல்லை"

இதைச் சொல்லி முடிக்கையில் மாமா மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருந்தார். அதைப் பார்த்த சதாமுக்கும் ஆவேசம் பொங்கியது. மாமா ஏன் வெள்ளைக்காரர்களை வெறுக்கிறார் என்பது இப்போது ஓரளவிற்கு புரிந்தது. வெள்ளக்காரர்களையும் அவர்களின் ஏஜண்டுகளையும் சுட்டுத்தள்ள வேண்டும் என்ற வெறி அவனுக்குள் தொடர்ந்தது. இதைச் சாதிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தான். அவனே சுயமாய் ஒரு வழி கண்டறிந்தான்.

(தொடரும்)

# மீண்டும் தலைகாட்டும் அரசின் பயங்கரவாதத் தடைச் சட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகைப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் இரண்டு வருட சிறை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மளிகையை அண்மித்த பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அநதப் பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், வாகனத் தொடர் அணிகள், பொதுக்கூட்டம் என்பன நடத்த முழுமையான தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாத பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க இதனைப் பிரகடனப்படுத்தியுள்ளார். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் 2001ஆம் ஆண்டு நீக்கப்பட்ட பாரதூரமான விதி முறைகள் மீண்டும் அமுலுக்கு வருகின்றன.

பயங்கரவாத பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் கொண்டு வரப்பட்டுள்ள விதிகளை மீறுவோருக்கு இரண்டுவருட காலச் சிறைத் தண்டனை அல்லது 5000ரூபா அபராதம் அல்லது இவையிரண்டும் விதிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளது.

தற்போது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தப் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் 1994ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில இருந்த ஒழுங்குவிதி முறைகளோடு சேர்த்துக் கடைப்பிடிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக ஜனாதிபதி மாளிகையை நோக்கியும் அதற்கு சமீபமாகவும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதையடுதத்தே இந்தப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையை அண்மித்த பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பு கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரகடனம் ஒரு வருட காலத்திற்கு அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# மகிந்த ராஜபக்ஷ, கதிர்காமருக்கு எதிராக ஐ.தே.க. போர்க் கொடி

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கக் கோரி போராட்டங்களை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற அக் கட்சியின் தலைவர்கள் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை நிவாரண நிதியான 25 மில்லியன் ரூபாவை தனது சொந்த நிதிக்கணக்கில் வைப்பிலிட்டு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ செய்த மோசடியை கொழும்பு ஊடகங்கள் அண்மையில் அம்பலப்படுத்தியிருந்தன.

அதேபோல் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தனது வெளிநாட்டுப் பயணத்தின் போது தமது துணைவியாரையும் அழைத்துச்சென்று வெளிவிவகார அமைச்சின் நிதியை பாரிய அளவில் முறைகேடாகப் பயன்படுத்தி வருவது குறித்து ஊடகங்களில் விமர்சிக்கப்பட்டு வருகின்றது.

இதனால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேணடும் என்று கோரி ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்த எண்ணியுள்ளனர். (க)

# அகதிகள் பு.நிறுவனம் உடுபுடவைகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்து வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் திக்கம்,நாகர் கோவில், கற்கோவளம், தும்பளை கிழக்கு ஆகிய நான்கு நலன்புரி நிலையங்களையும் பராமரித்து வருகின்றது.

திக்கம், கற்கோவளம்,தும்பளை கிழக்கு ஆகிய நலன்புரி நிலையங்களைச் சேர்ந்த மக்களுக்காக 592 உடுபுடவைகள் அடங்கலான உடுபுடவைப் பொதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டன.

இதனடிப்படையில் நாகர் கோவிலைச் சேர்ந்த 124 குடும்பங்களுக்கான உடுபுடவைகள் கடந்த சனிக்கிழமை இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# யுத்த காலத்தில் இருந்ததை விட பதற்றமான நிலையில் திருமலை

(திருகோணமலை)

திருகோணமலையில் புத்தர் சிலை மற்றும் இராணுவம் அகற்றப்படும் வரை அமைதி ஏற்படப் போவதில்லையென தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக நிறுவப்பட்ட புத்தர் சிலையும், குவிக்கப்பட்டுள்ள இராணுவமும் அகற்றப்படும் வரை திருகோணமலையில் அமைதி திரும்பாது என திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

திருகோணமலை நகரம் யுத்த காலத்தில் இருந்ததை விட மிகவும் பதற்றமான சூழ்நிலையில் காணப்படுகின்றது. மூவின மக்களினதும் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு வீதியில் இறங்குவதற்குக் கூட பயப்படுகின்ற நிலை உருவாகியுள்ளது.

இதற்கான முழுப்பொறுப்பையும் அரசும் பாதுகாப்புப் படைகளுமே ஏற்றுக் கொள்ளவேண்டும். இரவோடிரவாக நிறுவப்பட்ட புத்தர் சிலையே பிரச்சினைக்கு மூலகாரணமாகும். இந்த விவகாரத்தில் அரசு பலவித உறுதிமொழிகளை வழங்கியுள்ளது.

ஆனால் உருப்படியான நடவடிக்கை எடுக்கவில்லை.திருமலை நகரம் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. இதன் மத்தியில் செல்வநாயகபுரத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனை தாக்கப்பட்டு போராளிகளும் பொதுமக்களுமாக நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தமிழ மக்கள் பேரவை அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-9)

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர் - குறள்.

வலம்புரி

# ஆடிப்பிறப்போடு கூடிவரும் கலவரமும் கலக்கமும்

ஆடி மாதம் பிறந்துவிட்டால் தமிழ்மக்கள் நல்ல காரியங்கள் செய்வதை தவிர்த்துக்கொள்வர். இதற்கான காரணம் என்ன என்பதற்கு விஞ்ஞான விளக்கம் கொடுப்பது முடியாத விடயமாகும்.

எனினும் ஆடிப்பிறப்புடன் நாட்டில் கலகமும் கலக்கமும் ஏற்பட்டு விடுவது கடந்த காலங்களில் கண்டறிந்த உண்மை.

1983 ஆடிக் கலவரம் முதல் ஒவ்வொரு ஆடிப் பிறப்பிலும் ஏதோவொரு வகையில் சிக்கல்கள் ஏற்பட்டு விடுவது தவிர்க்கமுடியாது ஆகிவிடுகின்றது. இவ்வாறு ஆடி மாதத்தை விமர்சித்துக் கூறுகின்ற பொழுது அது வாசகர்களுக்கு விசித்திரமாக கூட இருக்கலாம்.

ஆனால், எமது சக்திகளுக்கு அப்பால் சில சம்பவங்கள் ஏதோவொரு காரண காரியத்துடன் நடந்துவிடுவதை விஞ்ஞான உலகம் ஏற்றுக் கொண்டுதான் உள்ளது.

அவ்வகையில் ஆடி மாதம் நாட்டில் கலகத்தை ஏற்படுத்திவிடுகிறது என்று நம்மூதாதையர் கூடிக் கதைக்கும் அனுபவமொழியை அடியோடு தட்டி விடுவது, அவ்வளவு பொருத்தமானது அல்ல.

இந்நிலையில் தற்போதைய சமாதான சூழ்நிலையும். இன்றோ, நாளையோ கலைந்து போகலாம் என்ற ஏக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசும் விடுதலைப்புலிகளும் இணங்கிக் கொண்ட பொதுக்கட்டமைப்பின் அரங்கேற்றம் சாத்தியப்படாது போல் தெரிகின்றது.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஜே.வி.பிக்கு அப்பால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பும் பொதுக்கட்டமைப்பின் எழுகைக்கு தடை போட்டுள்ளது. இந்நிலையில் சமாதான முயற்சியும் கேள்விக்குறியாகி உள்ளது.

பொதுக்கட்டமைப்பில் நம்பிக்கை கொண்டு விடுதலைப்புலிகள் செயற்பட்ட போதிலும் அதற்கு தென்னிலங்கை கள நிலைமை ஒத்துவருவதாக தெரியவில்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நிவாரணப் பணிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ள உலக நாடுகள் பொதுக்கட்டமைப்பை வெகுவாக வரவேற்றுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணியை விடுதலைப்புலிகளுடன் இணைந்து மேற்கொள்ளுமாறு உலகநாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தபோதிலும் அதிலிருந்து நாசூக்காக விலகிக்கொள்வதிலேயே அரசு கண்ணும் கருத்துமாகி உள்ளது.

அதாவது பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதன் மூலம் உலகநாடுகளை சமாளித்துக் கொண்ட அரசு அதனை நடைமுறைப்படுத்துவதில் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

பொதுக்கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள குழப்பம் என்பது அரசின் நேரடிச்செயற்பாட்டினால் ஏற்படாவிடினும் அதன் மறைமுகமான தந்திரோபாயங்களினால் ஏற்பட்டது எனக்கூறலாம்.

எதுவாயினும் அரசின் பொதுக்கட்டமைப்பு-சமாதான முயற்சி என்பவற்றில் விடுதலைப்புலிகள் நம்பிக்கை இழந்து விட்டனர்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை செய்து விட்டு தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு அரசதரப்பும் தென்னிலங்கை மக்களும் காலம் கடத்துவது நாட்டில் மீண்டும் இரத்த ஆற்றை ஓடவைப்பதற்கான வழியாகும்.

## வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்போவதாக அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

சுனாமி நிவாரணசபை மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு மேலதிகமாக இந்த அபிவிருத்தி செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அபிவிருத்தி செயற்திட்டம், நிவாரணம் மற்றும் மீள் கட்டமைப்பு அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும.

இந்த விடயம் தொடர்பான யோசனைக்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதேவேளை,சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள நேர்ந்ததாக கூறிய அமைச்சர், அது கிடைக்காமல் போயிருந்தால் வரவு செலவுத் திட்டங்கள் மூலம் ஒதுக்கபபடும்நிதி அந்தப் பகுதிகளைக் கட்டியெழுப்ப போதுமானதாக இருக்காது என்று குறிப்பிட்டுள்ளார். (க-9)

## வவுனியா, மன்னாரில் வீதித்தடைகள் அதிகரிப்பு

(மன்னார்)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் வீதித்தடைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக வன்னிப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.பத்தேகல தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன, சோதனை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் கரையோரப் பிரதேசம் ஒன்றிலிருந்து அதிசக்தி வாய்ந்த கிளைமோர்க் குண்டுகள் சிலவற்றைப் பொலிஸார் கைப்பற்றியதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைதுசெயயப்பட்ட 7 பேரும் மன்னார் பதில் நீதவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் 7 பேரையும் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதை அடுத்து இவர்கள் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-9)






யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில் தலைமையில் நடைபெற்ற சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட படங்கள். (ஞா. ஐங்கரன்)

## முத்தலிப் கொலை

# சந்தேக நபர் சஞ்சீவவிடம் ஐ.தே.க. அடையாள அட்டை

(கொழும்பு)

கொழும்பில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரியான முத்தலிப்பின கொலையுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்குத தொடர்பு உள்ளதெனக் கூறப்படும் குற்றச்சாட்டை முழுமையாக மறுபபதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனாரட்ண தெரிவித்துள்ளார்.

முத்தலிப்பின் கொலையுடன் தொடர்புடைய சஞ்சீவ என்ற நபர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவில் இருக்கவில்லை. இந்த நபருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது. இது சிலரால் பரப்பிவிடப்பட்ட வதந்தியாகும். ஆனால் இந்த சஞ்சீவ என்ற நபரை எமக்குத் தெரியும். நாம் அரசியல்வாதிகள் என்றபடியால் பலரைச் சந்திக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைக்கும். பல பேர் நம்மிடம் வந்து உரையாடுவார்கள், பழகுவார்கள். அவர்கள் அனைவரினதும் இறந்தகாலத்தை எம்மால் தேடமுடியாது. நாம் இலட்சக் கணக்கான மனிதர்களுடன் இருக்கின்றோம். சஞ்சீவ என்ற நபரும் அவ்வாறு தான் எம்மோடு பழகினார்.

சஞ்சவ என்ற நபருடன் எமக்குள்ள ஒரே தொடர்பு 2004ஆம் ஆண்டு தேர்தலின் போது உதவியதற்காக கொழும்பு மாவட்டத்தின ஐக்கிய தேசியக் கட்சியின் அடையாள அட்டை ஒன்றைப் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

இநத அடையாள அட்டை முச்சக்கர வண்டிகளின் சாரதிகளுக்கும அதேபோல் எமக்கு உதவும் ஊடகவியலாளர்களுக்கும் சகல தொகுதியிலுள்ள கட்சியினருக்கும் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு சஞ்சீவ என்ற நபருக்கும் வழங்கப்பட்டது. இதைவிட எமக்கும் சஞ்சீவவுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்று கூறினார். (அ-8)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு கொரிய அரசு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களது விபரங்களை கொரிய அரசாங்கம் கோரியுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று வருபவாகளது பெயர் விபரங்களை யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என். யோகராஜன் அனுப்பி வைத்துள்ளார்.

இதன் பிரகாரம் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாணவருக்கும் கொரிய நாட்டு அரசாங்கத்தினால் 5ஆயிரம் ரூபா பணமும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இப் பணத்தினையும் சான்றிதழ்களையும் கொரிய நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி யங்ரேகன் இன்று மாலை வழங்கவுள்ளதனால் சுனாமியால் பாதிக்கப்பட்டு பதிவு செய்த யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களை தவறாது வந்து பெற்றுக்கொள்ளும் படி யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-19)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

உனக்கு ஏதாவது தீங்கு நேருமாயின், இறைவன் உன்னுடன் விளையாடுகிறான் என நினைத்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் இரு. ஆரம்பக் காலத்தில் தீயோரின் தொடர்பைத் தவிர்த்து விடு. உலகியலில் நாட்டம் உள்ளவர்களுடன் தொடர்புகொள்ளாதே. அது உனது மனப் போக்கை மாற்றிவிடும். ஆன்மாவில் நிலைத்திரு. அப்போது தான் உலகத்தை நேசிக்க முடியும். எப்போதும் மிகவுயர்ந்த நிலையில் இரு.

சுவாமி விவேகானந்தர்

# ஆசிய பசுபிக் வலய ஜனநாயக சங்கத் தலைவராக ரணில் தெரிவு செய்யப்பட்டார்

(கொழும்பு)

ஆசிய பசுபிக் வலய ஜனநாயக சங்கத்தின் தலைவராக எதிர் கட்சித்தலைவரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் வாசிங்டன் நகரில் நடைபெற்ற மாநாட்டிலேயே இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச ஜனநாயக சங்கத்தின் இணை அமைப்பான இந்த சங்கம், ஜனநாயகம் பலவீனமாக உள்ள நாடுகளின் ஜனநாயகத்தின் பெறுமதியினை பலப்படுத்தும் நோக்கில் செயற்படுகிறது.

ஆசிய பசுபிக் வலய ஜனநாயக சங்கத்தின் தலைவர் பதவியினை ஏற்றுக்கொண்ட எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க மூன்று விடயங்கள் அடங்கிய செயற்பாட்டுத்திட்டமொன்றை மாநாட்டில் முன்வைத்தார்.

சங்கத்தின் உறுப்புரிமையை விரிவுபடுத்த, நிதியினைப் பெற்றுக்கொள்ளல், தேர்தல்களினை முகாமைத்துவம் செய்தல் போன்ற திட்டங்கள் இதில் அடங்கியுள்ளன.

ஆசிய பசுபிக் வலய நாடுகளின் ஜனநாயகத்தினை பாதுகாப்பது, மற்றும் அதனை மேம்படுத்துவதனை முக்கியத்துவம் குறித்தும் ரணில் விக்கிரமசிங்க கூட்டத்தில் வலியுறுத்தினார்.

சர்வதேச ஜனநாயக சங்கத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் இந்த மாநாடு தற்போது வாசிங்டனில் நடைபெறுகிறது.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சித்தலைவர்களுடன் வெள்ளை மாளிகையில் விசேட பேச்சுவார்த்தை ஒன்றை இன்று நடத்தவுள்ளார்.

ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் என்ற தலைப்பில் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. (இ-4)

# புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு பற்றறிகள் கொண்டு செல்லதடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு பற்றறிகள்,வயர்கள் உட்பட மின்சார உபகரணங்களை கொண்டுசெல்வதற்கு படையினர் தடைவிதித்துள்ளனர்.

மின்சாரப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு தடை விதித்துள்ளதுடன் பொதுமக்கள் கடுமையான விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டும் வருகின்றனர்.

பெண்கள் உட்பட அனைவரும் உடல் சோதனை செய்யப்படுகின்றனர். இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் கூட்டாக இந்தச்சோதனைகளை மேற்கொள்கின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதிக்குச் செல்லும் நுழைவாயில்கள் மிகவும் இறுக்கமாக கண்காணிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

மாங்கேணி, செங்கலடி, கறுத்தப்பாலம், மட்டக்களப்பு மண்முனை, களுவாஞ்சிக்குடிப்பாலம் போன்ற பகுதிகள் ஊடாகச் செல்வோர் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இதேவேளை அம்பாறை மாவட்ட முக்கிய பொலிஸ் அத்தியட்சகர் சரத்ஜெயசுந்தர நேற்றுக்காலை அக்கரைப்பற்று திருக்கோவில் பகுதிகளுக்கு பயணத்தை மேற்கொண்டு அப்பகுதிப் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்ததுடன் ஏனைய அதிகாரிகளுடன் கலந்துரையாடி சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு பணித்துள்ளார். (இ-4)

# துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை கல்மடுவில் நேற்று முன்தினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் அவரது வீட்டில் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த அவர் மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் கணபதிப்பிள்ளை இளையதம்பி (வயது 40) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் வீட்டிற்கு வந்த துப்பாக்கி நபர்கள் இந்தத் துப்பாக்கிச்சூட்டை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இது பற்றி கல்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

## புரிந்துணர்வு...

கள் தெரிவித்த யோசனை, அதற்கு பாதுகாப்பு அமைச்சின் பதில் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு கண்காணிப்புக் குழு 3வது யோசனை ஒன்றைத் தயாரித்துள்ளது.

அந்த யோசனையும் ஜயந்த தனபாலவிடம் கையளிக்கப்பட்டது என்று ஹொக்லண்ட் மேலும்தெரிவித்தார். (இ-4)

# அமைச்சரவை அனுமதியின்றி சுனாமி நிதி வங்கியிலிடப்பட்டது

## பிரதமரின் குட்டு அம்பலமாகிறது

சுனாமி நிவாரண நிதியாக கிடைக்கப் பெற்றபணத்தை தனியார் வங்கிக்கணக்கொன்றுக்கு மாற்றுவதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி நிவாரண நிதியாக வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள 82 மில்லியன் ரூபா பணத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனியார் வங்கிஒன்றில் வைப்புச் செய்திருப்பதாக முன்னதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

பாராளுமன்றத்தில் இந்த விவகாரம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த பிரதமர் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றே அந்தப் பணத்தை தான் வங்கியில் வைப்புச் செய்ததாக தெரிவித்திருந்தார்.

எனினும் பிரதமர் கூறியது போல மேற்படி பணத்தை தனியார் வங்கிஒன்றில் வைப்புச்செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக் கவல்லை எனவும் அமைச்சரவை யின் எதிர்ப்பையும் மீறியே இந்தப் பணம் தனியார் வங்கி ஒன்றில் பிரதமரினால் வைப்புச்செய்யப்பட் டிருப்பதாகவும் தெரிய வந்திருக்கிறது.

இவ்வாறு தனியார் வங்கி ஒன்றில் வைப்புச்செய்யப்பட்ட பணம், பின்னர் கூடிய வட்டிவழங்கும் நிலையான வைப்பு ஒன்றுக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-4)

# புதிய அமைச்சர்கள் நேற்று ஜனாதிபதிமுன் பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

அமைச்சரவையில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஜே.வி.பியின் அமைச்சர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகியமையை அடுத்து இந்த மாற்றங்கள் நேற்று செய்யப்பட்டுள்ளன.

இதன் பின்பு 5அமைச்சரவை அதிகாரமுள்ள அமைச்சர்களும் ஒரு அமைச்சரவை அதிகாரம் இல்லாத அமைச்சரும் 6பிரதியமைச்சர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

மைத்திரிபால சிறிசேன நீர்ப்பாசன மகாவலி ரஜரட்டை அபிவிருத்தி அமைச்சராகவும். மில்ரோய் பெர்ணான்டோ கடற்றொழில் நீர்வள, கிறிஸ்தவ விவகார அமைச்சராகவும், திஸ்ஸ கரலியத்த காணி சுதேச வைத்திய அமைச்சராகவும், எஸ் பி.நாவின்ன சிறிய கிராமிய கைத்தொழில் அமைச்சராகவும், சி.பி.ரட்நாயக்க நடுத்தர சிறியளவிலான பெருந்தோட்டக் கைத்தொழில்கள், கிராமிய, மனிதவள அபிவிருத்தி கால்நடைத்துறை அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

சேகு இஸ்ஸதீன் சிறிய மற்றும் கிராமியக் கைத்தொழிலுக்கு உதவும் அமைச்சரவை அதிகாரம் அற்ற அமைச்சராக பதவியேற்றார். இதேவேளை ஜகத் புஸ்பகுமார விவசாயத்துறை பிரதியமைச்சராகவும், டிலான்பெரேரா ஊடகத்துறை பிரதியமைச்சராகவும்,

ஜயரட்ண ஹேரத் சுகாதார பராமரிப்பு போசாக்கு மற்றும் ஊவா வெல்லச அபிவிருத்தித் துறைக்கான பிரதியமைச்சராகவும் பதவியேற்றுள்ளனர்.

பிரேம்லால் ஜெயசேகர நீர்ப்பாசன மகாவலி, ரஜரட்ட பிரதியமைச்சராகவும், சந்திரசிறி கஜவீர கடற்றொழில் நீரியல் வள அமைச்சராகவும்,

மேர்வின் சில்வா தொழில் உறவுகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி யமைச்சராகவும். பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர் (இ-4)

## சர்வதேச...

சுமார் 4 இலட்சத்துக்கும் அதிக மான மக்களை திரட்டி மாபெரும் எழுச்சிப்போராட்டம் ஒன்றை நடத் துவதென முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் இவ் எழுச்சிப் போராட்டத்தை தமிழர் தாயகப் பகுதி மாவட்டங்கள் தோறும் விஸ்தரிப்பது என்றும்,

இதன் இறுதியில் சர்வதேச பிரகடனம் ஒன்றை வெளியிடுவது எனவும் முடிபுசெய்யப்பட்டுள்ளது. நேற்றைய கூட்டத்தில் பொது அமைப்புக்களின் ஒன்றியப்பிரதிநிதிகள், மாணவர்பிரதிநிதிகள் என பெருந்திரளானோர் கலந்துகொண்டனர் (இ-19-4)

## படைப் புலனாய்வு...

வல் வழங்குபவர்களைச் சந்திப்பதாக இருந்தாலும் உயர் அதிகாரிகளுக்கு அறிவித்து உரிய அனுமதியைப் பெற்றபின்னரே அவர்களைச் சந்திக்கவேண்டும் என்றும், கடந்த வெள்ளிக்கிழமை அன்று மின்னேரியாவில் உள்ள கிழக்கு இராணுவத்தலைமையகத்தில் பிராந்திய பிரிகேட் தளபதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நேரடியாக இந்த உத்தரவை வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அண்மையில் மட்டக்களப்பு ஊரணிப்பிரதேசத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இருவரும் சாரதி ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்ட போது புலனாய்வுப்பிரிவினருக்கு தகவல் வழங்கும் ஒருவரே இவர்களை அந்தப் பகுதிக்கு வருமாறு அழைத்திருந்தார்.

இதையடுத்து இராணுப் புலனாய்வுப் பிரிவினருக்கு இவ்வாறான உத்தரவு வழங்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (இ-4)


யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

கற்றல் கற்பித்தல் தர உள்ளீட்டு உபகரண மூலவள நிலையம் நடாத்தும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கற் போட்டி –2005

இடம்:– யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வளாகம்
காலம்:– 21.07.2005 வியாழக்கிழமை காலை 9.00 மணி
தலைவர்:– கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

மேற்படி நிகழ்வு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் வாண்மையை உயர்த்தி மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு வழிகாட்டும் நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

ஆக்கங்கள் சமர்ப்பிக்கும் திகதி :–20.07.2005 அன்று மாலை

மேலதிக விபரங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன இந்நிகழ்வு தொடர்பாகத் தகவல்களைப் பெறவேண்டின் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

திரு.த.சிவகுமார்
நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்–விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

விளம்பர அனுசரணை:இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
50,52,54,கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
T.P.021 222 2988
FAX:021 222 2368
(c-1483)



நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்.
15.07.2005 முதல்
அர்ஜுன்,சினேகா,கிரண்,வடிவேலு
சேர்ந்து கலக்கும் அதிரடி
காதல் நகைச்சுவையுடன்
சின்னா
கா.நே.10.30,2.30,6.30,9.30
இந்தியாவிலும் ஈழத்திலும் ஒரேதினத்தில்



மனோகரா
யாழ்ப்பாணம்
ஷங்கரின் இயக்கத்தில்
4வது வெற்றி வாரம்
சீயான் விக்கிரம், சதா, விவேக் ஆகியோரின்
சிறப்பு நடிப்பில்
அந்நியன்
கா.நே:10.30, 2.30,6.30, 9.30
20 ஆம் திகதிவரை
22.7.05 முதல்
அதிரடி வெளியீடு
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதினத்தில்
மாதவன், சதா, கோவைசரளா நடித்த
பிரியசகி



நிறைஞ்சனாஸ் (சங்கானை)
முரளி, நாசர், பிரதியுக்ஷா நடித்த
மனுநீதி
22.07.2005 வெள்ளி முதல்
சந்திரமுகி
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)



பதவி வெற்றிடம்

*கணனி பக்க அமைப்பாளர்கள்
(ஆண்கள் இரவுக்கடமை)

*பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
(பெண்கள் பகல் கடமை)

வலம்புரி நிறுவனத்திற்கு 6கிலோமீற்றர் தூரத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டும் பிற்பகல் 3.30மணிக்கு சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில்வரவும்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.